Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 29 திங்கட்கிழமை (11-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:197

# சொல்ஹெய்மை நீக்க ராஜதந்திர சதிவலை!

## தளுவத்தையின் இடத்துக்கு ஜயலத் வீரக்கொடி

கொழும்பு,ஜூன்11

கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ரொஹான தளுவத்த வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதை அடுத்து -

அவரது கடமைகளைச் செய்வதற்காகப் பதில் தளகர்த்தராக விமானப்படைத் தளபதி ஏயர் வைஷ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள முதலாவது விமானப் படைத் தளபதி இவர் ஆவார். (உ-3)

## அரசின் மீது குற்றஞ்சாட்டி விடுதலைப் புலிகள் அறிக்கை

வவுனியா,ஜூன்11

**நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை இராஜதந்திர வலைக்குள் சிக்க வைத்து, அவரை சமாதான நடவடிக்கைகளில் இருந்து புறந்தள்ளுவதற்கு ஸ்ரீலங்கா அரசு முயற்சிப்பது தமக்கு கவலையையும் வேதனையையும் தருகின்றது என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.**

சொல்ஹெய்மைப் புறந்தள்ளி, அவரது செயற்பாட்டுத் தகைமையைக் குறைத்து விடுவதற்கு சிறீலங்கா அரசு மேற்கொண்ட முயற்சியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துமுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று வன்னியிலிருந்து விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் நோர்வேயின் அனுசரணை முயற்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் குறித்து தனது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறது. நோர்வேயின் முயற்சிக்கு, தரம் உயர்த்தல் என்ற போர்வையின் கீழ், சொல்ஹெய்மின் ஆக்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தான் புறந்தள்ளப்படவில்லை என்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

லண்டன்,ஜூன்11

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கான அனுசரணையாளர் என்ற நிலையில் இருந்து தாம் புறக்கணிக்கப்பட்டதாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மறுத்துள்ளதாக தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றிரவு அறிவித்தது.

பத்திரிகைகள் இந்த விடயதகை மிகைப்படுத்தி செய்தி வெளியிடுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரும் பிரதி வெளிவிவகார அமைச்சரும் இந்த விடயங்களை உயர்மட்டங்களில் கையாள்வார்கள் என்றும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசு அமைக்கும் விடயம்

## ரணிலுக்கு ஜனாதிபதி பிரதமர் மூலம் அழைப்பு?

கொழும்பு,ஜூன்11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும ஐ.தே.கட்சியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனையின் முன்னோடி நடவடிக்கையாக -

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தம்மைச் சந்திக்கும்படி பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மூலம் தூது விட்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த அழைப்பை, தமக்கு நேரமில்லை என்று தெரிவித்து ரணில் நிராகரித்துவிட்டதாகவும்கூட அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் இரவு விருந்து ஒன்று இடம் பெற்றது.

அந்த விருந்தில் பிரதமர், அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க ஆகியோரும் பங்குபற்றினர்.

அங்கு நடந்த கலந்துரையாடலில் தேசிய அரசு பற்றி பிரஸ்தாபிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### அரசமைப்பு நெருக்கடி விவகாரம்:

## ஆலோசனை நடத்த வருமாறு சொக்ஸிக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு,ஜூன்11

பிரதம நீதியரசருக்கு எதிராக ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள குற்ற விசாரணைப் பிரேரணையால் ஏற்பட்டுள்ள அரசமைப்புச சட்ட நெருக்கடிக்குத் தீர்வு காணும் நோக்குடன் -

ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.என்.சொக்ஸியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 18 ஆம் திகதி தம்முடன் பேச்சு நடத்த வருமாறு அழைத்துள்ளார்.

இந்தப் பிரேரணையின் அடிப்படையில் பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகளை நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படுவதை இடைநிறுத்தி, இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை உயர்நீதிமன்றம் விடுத்திருக்கின்றது.

இந்தத் தீர்ப்பை ஏற்று சபாநா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பின் தள்ளப்பட்டதன் பின்னணி!

கொழும்பு,ஜூன்11

சமாதான நடவடிக்கைகளிலிருந்து தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பின் தள்ளப்பட்டதன் பின்னணியை 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் வெளியிட்டிருக்கின்றார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைத் தேடும் முயற்சிக்கு நோர்வேயின் பங்களிப்பு அவசியம் என்று அரசும விடுதலைப் புலிகளும் ஒன்றாகக் கேட்டுக்கொண்டமை குறித்துக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் "இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நோர்வே அரசாங்கம், இதுவிடயத்தில் இருதரப்பையும் ஒனறாகக் கொண்டுவரும் நடவடிக்கைக்கு உதவுவதற்காக எரிக் சொல்ஹெய்மையும் தூதுவர் ஜோன் வெஸ்ட் போர்க்கையும் நியமித்தது" - என்று தெரிவித்திருந்தார்.

இந்த இரு நோர்வே நாட்டவர்களையும் பாராட்டிய அவர் "இந்த விடயத்தை நோக்கிய இவ்விரு கனவான்களினதும் அவர்களது உதவியா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆமர் வீதியில் மின்மாற்றி வெடித்தது

கொழும்பு,ஜூன்11

கொட்டாஞ்சேனை ஆமர் வீதியில் நேற்று மாலை மின்மாற்றி ஒன்று வெடித்ததால் ஐவர் காயமடைந்தனர்.

மின்சாரசபை ஊழியர்கள் அதைத திருத்திக் கொண்டிருந்த சமயமே அது வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

## சந்நிதிக் கடலில் மாணவன் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

தொண்டமனாறு செல்வச்சந்நிதிக் கடலில் நேற்றுக் குளித்துக்கொண்டிருந்த மாணவன் ஒருவர் மூச்சுத் திணறி மரணமானார்.

வயாவிளான் ம.ம.வித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த சிறிநிதி கபில் என்ற மாணவனே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு சென்று நீராடியபோது, இவரும் அவர்களுடன் சேர்ந்து நீராடிய போதே மூச்சுத் திணறி இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-3-5-31-117)

## உலகவங்கிக் குழு மட்டக்களப்புக்கு விஜயம்

மட்டக்களப்பு,ஜூன்11

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு-கிழக்கில் அமுல் நடத்தப்பட்டு வரும் ஒன்றிணைந்த நீர்ப்பாசன புனரமைப்புத் திட்ட(நியாப்) வேலைகளைப் பார்வையிட உலக வங்கித் தூதுக்குழு ஒன்று இன்று திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட இத் தூதுக் குழுவினர் இரண்டு தினங்கள் தங்கியிருந்து நியாப் திட்டத்தின் கீழ் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வாகரைப் பகுதியில் புனரமைககப்பட்டு வரும் மதுரங்கேணிக் குளம் மற்றும் எட்டுமுறிவுக்குளம் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடுவர்.

அங்கு தங்கியிருக்கும் போது அரசஅதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்திப்பர். (-3)

## இஸ்ரேலிடமிருந்து மேலும் அதிவேகத் தாக்குதல் படகு

கொழும்பு,ஜூன்11

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தலை முறியடிப்பதற்காக ஷால்டாக் (SHALDAG-CLASS) ரக அதிவேக தாக்குதல் படகுகள் நான்கை இஸ்ரேலிடம் இருந்து இலங்கை கொள்வனவு செய்யவிருக்கின்றது.

ஆனையிறவுத் தளம் புலிகளிடம் வீழ்ந்த கையோடு - கடந்த ஓகஸ்ட் மாதமே - இந்த படகுகளை கொள்வனவு செய்வதற்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்சமயம் தயார் நிலையில் உள்ள ஒரு படகை எடுத்து வருவதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அங்கு சென்றுள்ளது.

ஐவர் கொண்ட இந்தக் குழுவில் வேகத் தாக்குதல் படைப்பிரிவின் தளபதியும் இடம்பெற்றுள்ளார்.

இதே ரகப் படகுகளை கடற்படையினர் 96 ஆம் ஆண்டு இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்திருந்தனர். அவை தற்சமயம் சேவையில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தொலைத்தொடர்புகளை வழிமறித்துக் கேட்க புதிய கருவி

கொழும்பு,ஜூன்11

விடுதலைப் புலிகளின் தொலைத் தொடர்புகளை வழிமறித்து ஒட்டுக் கேட்க வசதியாக நவீனரக கருவிகள் இரண்டை பிரான்ஸில் இருந்து கொள்வனவு செய்வதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகைய கருவி ஒன்றை படையினர் இதுவரை காலமும் பயன்படுத்தி வந்தனர் என்றும் -

தென்மராட்சியில் அண்மையில் இடம்பெற்ற 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கையின் போது இந்தக் கருவி பழுதடைந்துவிட்டது என்றும் -

இதன் காரணமாகவே புதிய கருவிகள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

அந்த இராணுவ நடவடிக்கை தோல்வியடைய முக்கிய காரணமாக இருந்தது இந்த வகையான கருவி பழுதானமையே என்பது விசாரணைகளில் தெரியவந்தது என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கருவியை விமானப்படையின் இலகுரக விமானம் ஒன்றில் பொருத்தி அதன்மூலம் புலிகளின் தொலைத் தொடர்புகளை இலகுவாக வழிமறித்துக் கேட்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-9)

### மன்னார் வல்லுறவு வழக்கு:

## நீதிமன்ற மாற்றத்துக்கு சட்டமா அதிபர் மறுப்பு

கொழும்பு,ஜூன்11

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கை மன்னார் நீதிமன்றத்தில் இருந்து வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்த வழக்கின் சந்தேக நபர்களான பொலீஸ் அதிகாரிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு மீதான விசாரணையின் போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இத்தகவலை வெளியிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடியவடையவில்லை என்றும் -

விசாரணைகள் பூர்த்தியடைந்த பின்னர் நீதிமன்ற மாற்றம் குறித்துப் பரிசீலிக்கலாம் என்றும் -

சட்டமா அதிபர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் சந்தேகநபரான மன்னார் பயங்கரவாதத் தடுப்புப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கப்பல் கட்டணம் 50 ரூபாவால் உயர்வு

திருகோணமலை,ஜூன்,11

திருமலை - யாழ். கப்பல் பயணக் கட்டணம் மேலும் 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் 'திருமலை நகரம்' கப்பல் மூலம் பயணம் மேற்கொள்பவர்கள் 1,625 ரூபா கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுக அதிகார சபைக்கு செலுத்துவதற்காகவே ஒவ்வொரு பயணியிடமிருந்தும் மேலதிகமாக 50 ரூபா அறவிடப்படுவதாகக் கப்பல் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகாலவரை ஜி.எஸ்.ரி., பாதுகாப்பு வரி உட்பட ஒரு பயணியிடமிருந்து 1,575 ரூபா அறவிடப்பட்டு வந்தது. அப்போதும் துறை முக அதிகார சபை ஒவ்வொரு பயணியின் பேரால் ஐம்பது ரூபா பணத்தைக் கப்பல் நிறுவனத் திடமிருந்து அறவிட்டு வந்தது. எனினும் கப்பல் நிறுவனம் அப்பணத்தைப் பயணியிடமிருந்து அறவிடவில்லை.

துறைமுகக் கட்டணமாக ஐம்பது ரூபா அறவிடுவதை நிறுத்தும்படி துறைமுக அதிகார சபையைக் கப்பல் நிறுவனம் கோரிவந்தது. ஆனால் துறைமுக அதிகாரசபை ஒவ்வொரு பயணியின் பேரால் ஐம்பது ரூபா கட்டணத்தைத் தொடர்ந்தும் அறவிட்டு வரவே கப்பல் நிறுவனம் அந்த 50 ரூபா கட்டணத்தை பயணியிடமிருந்து நேரடியாக அறவிடத் தீர்மானித்துள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

# தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களினதும் தளராத விடாமுயற்சி ஸ்ரீலங்கா அரசினால் ஆழ்ந்து மதிக்கப்படுகின்றது" - என்று அறிவித்திருந்தார்.

### கனவான்களின் நிலை

ஆனால் அந்த வஞ்சகப் புகழ்ச்சி வழங்கி மூன்று வாரத்துக்குப் பின், இந்தத் 'தளராத விடாமுயற்சி' அல்லது சொல்ஹெய்ம் இனிமேலும் அரசினதும் அதன் தலைவர்களினதும் ஆழ்ந்த மதிப்புக்கு உரியது அல்லது உரியவர் அல்லர் என்பதை அரசு கண்டு கொண்டது.

ஸ்ரீலங்கா ஓர் இறைமையுள்ள நாடு என்பதனையும், விடுதலைப் புலிகளுடன் சமாதானம் குறித்துப பேசும் நோர்வே நாட்டவராகவோ அல்லது அனுசரணையாளராகவோ சொல்ஹெய்ம் இருப்பதை விரும்பவில்லை என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

கதிர்காமரின் கடந்த 10ஆம் திகதிய கடிதத்தில் விதந்துரைக்கப்பட்ட இந்தக் கனவான்கள் பற்றிய விடயம் இதற்கிடையில் பிழைத்துப் போனதற்கு பின்னணி என்ன?

கொழும்பில் உள்ள மேற்குலக ராஜதந்திர வட்டாரங்களுடனும் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவின் அதிகாரபூர்வ வட்டாரங்களுடனும் தொடர்பு கொண்டதில் சில பின்னணிகளை அறியமுடிந்தது.

### பின்னணி

கடந்த மாதம் சொல்ஹெய்ம் கொழும்புக்கு விஜயம் செய்த பின்னரே அவர் மீது அரசுக்கு விருப்பமின்மை அதிகரித்ததாக அறிய முடிகின்றது.

அந்த விஜயத்தின் போது - மே 17ஆம் திகதி - வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பிய சொல்ஹெய்ம், தமிழ்செல்வனுடனான சந்திப்புக் குறித்து - புலிகள் தம் மீதான தடையை விலககும்படி வற்புறுத்துவது குறித்து - ஜனாதிபதிக்கும் அமைச்சர் கதிர்காமருக்கும் தெரிவித்துவிட்டு அமெரிக்காவிற்குப் பறந்தார்.

அதன் பின்னர் அமெரிக்காவில் அந்நாட்டு அதிகாரிகளைச் சந்தித்து, தமிழ்சசெல்வனுடனும் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஆகியோருடனும் தாம் நடத்திய சந்திப்புக்களின் விவரங்களைச் சொல்ஹெய்ம் எடுத்துரைத்ததாகச் செய்திகள் வெளியாகின.

"சொல்ஹெய்ம் அமெரிக்க அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுகள் பற்றிய செய்திகள் உங்கள் (இலங்கை) அரசாங்கத்தைச் சினம் கொள்ள வைத்ததோடு மானபங்கப்படுத்தவும் வைத்துவிட்டனபோல் தோன்றுகிறது" - என்று உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார்.

சொல்ஹெய்ம் வெளியிட்ட சில குறிப்புகள் அனுசரணையாளர் என்ற அவரது பொறுப்புகளுக்கு அப்பாற்பட்டவை என்றும், எதிர்ச்சார்புடைய அவரது கருத்துக்கள் என்றும் அரசு கருதுவதாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்துவதற்கு அமெரிக்க அதிகாரிகளை இணங்கச் செய்யும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

### பொ.ஐ. முன்னணியின் தலைவர்களின் கருத்து

அனுசரணையாளர் என்ற பொறுப்பில் இருந்து கொண்டும் தவறாமல் பத்திரிகைகள், இணையத்தளங்களுக்குப் பேட்டியளிப்பது போன்ற அளவு கடந்த தொடர்புசாதன விளம்பரத்தை சொல்ஹெய்ம் மேற்கொண்டு வருவது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் வெளிப்படுத்திய கவலை அதிகரித்துக் கொண்டு போன சமயத்தில்தான் இந்த ஆச்சரியம் தரும் திருப்ப நிகழ்வுகள் வநதுள்ளன.

சமாதானத் 'தரகர்' பணியில் உள்ள ஏனைய நோர்வே நாட்டவர்கள் தமது பணி தொடர்பாக இரகசியம் பேணுவதில் வெளிப்படுத்தி வந்த உயர் தகைமையில் இருந்து சொல்ஹெய்மின் செயற்பாடுகள் முற்றிலும் வேறுபட்டு இருந்ததாகப் பொது மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கருதினர்.

இது விடயத்தில், பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும இடையில் சமரசப்பணியாற்றிய நோர்வேயின் முயற்சிகளை ஓர் அரச அதிகாரி உதாரணமாகச் சுட்டிகாட்டினார்.

அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸனின் ஆட்சிக்காலத்தில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஹென்றி கிஸிங்கர் வெளிப்படுத்திய சந்தடியற்ற இராஜதந்திரத்தையும் அவர் குறிப்பிட்டார். அமெரிக்க - சீன உறவுகளைச் சீர்படுத்துவதற்காக, அதறகு முன்னர் பல விஜயங்களை அவர் சீனாவுக்கு மிக இரகசியமாக மேற்கொண்டார் என்றும் அவர் கூறினார்.

சொலஹெய்மின் நடவடிக்கைகள் மற்றும் அவரது பகிரங்கப் பேச்சுகள் பற்றிய மிகநெருக்கமான கண்காணிப்பே அரசை உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கத் தூண்டின.

### கதிர்காமரிடமிருந்து தொலைபேசி அழைப்பு

ஜனாதிபதி குமாரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் ஆகியோருடன் கடந்த சில மாதங்களாக உரையாடிவந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்ட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகாவை வந்து சந்திப்பது தொடர்பாகக் கடந்த வாரம் கதிர்காமரிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்புக் கிடைத்ததாக ஒஸ்லோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் அதை இணங்கி ஏற்றுக் கொண்டார்.

விசேட தூதுவர் சொல்ஹெய்ம் சகிதம் வியாழன்று அவர் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

அப்போதுதான், வியாழன் இரவு ஜனாதிபதி இல்லத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சகிதம் இடம்பெறவிருக்கும் இரவு விருந்துடன் கூடிய சந்திப்புக்குத் தான் அழைக்கப்படவில்லை என்ற விவரத்தை சொல்ஹெய்ம் உணர்ந்து கெண்டார். ஜக்லண்ட் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார். இரவு விருந்துடன் கூடிய அந்தக் கலந்தாலோசனை ஐந்து மணி நேரம் நீடித்தது.

இந்தக் கலந்தாலோசனை பற்றிய விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. ஆனால் சொல்ஹெய்மின் செயற்பாடுகள் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் இருதரப்பும் மனந்திறந்து, சுயாதீனமாகக் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டதாக அறிய முடிந்தது.

சொல்ஹெய்மின் உள்நோக்கம் மற்றும் பாரபட்சமின்மை தொடர்பாக அவர் மீது இருந்த நம்பிக்கையை அரசு இழந்து விட்டது என்பது மட்டும் தெளிவாகப் புலனாகின்றது.

### அதிகம் பேசினார் சொல்ஹெய்ம்

கடந்த பல மாதங்களாக, சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகப் பல நாடுகளிலும் உள்ள பல்வேறு வெகுஜன ஊடகங்களுடனும் சொல்ஹெய்ம் மிகவும் அதிகமாகப் பேசி வந்தார் என்பது நன்கு தெரிந்த விடயமே.

இணையத்தளம் மூலம் நடத்தப்பட்ட சில நேர்காணல்களில் உலகம் முழுவதும் உள்ள மக்கள் பல கேள்விகளை எழுப்பினர். அந்த நேர்காணல்களில் கேட்கப்பட்ட கேள்விகளையும், பதில்களையும் பயன்படுத்தி தனது தனிப்பட்ட 'இமேஜை' வளர்க்கும் நடவடிக்கையை அவர் மேற்கொண்டார். அனுசரணையாளர் என்ற முறையில் தாம் ஆற்றும் பணி குறித்து ஒரு புத்தகம் எழுதப் போவதாகவும் கூட அவர் கூறியிருந்தார்.

தற்றுணிவு மற்றும் இராஜதந்திரம் தொடர்பாக நோர்வேக்கு உள்ள சிறந்த மதிப்பின் அடிப்படையிலேயே தான் இப்பணிக்கு நாம நோர்வேயை அழைத்தோம் என்பது அரசின் நிலைப்பாடு.

ஆனால் சொல்ஹெய்மின் செயற்பாடோ நோர்வேயின் இந்தப் பாரம்பரியத்துக்கு முற்றிலும் முரணானது என ஸ்ரீலங்கா அரசு கருதுகின்றது.

இனி நடக்கும் எந்தப் பேச்சுத் தொடர்பாகவும் இரகசியம் பேணுவது என்று நோர்வேயும் ஸ்ரீலங்காவும் கடந்த வெள்ளியன்று இணங்கிக் கொண்டன.

தாங்கள் இதுவரை தொடர்புகளை வைத்திருந்தது நோர்வே அரசுடன் மட்டுமே; தனிப்பட்ட ஆளுடன் அல்ல என்பதை சர்வதேச உலகுக்குத் தெளிவுபடுத்த ஸ்ரீலங்கா அரசு விரும்புகின்றது. இதைத்தான் ஜக்லண்டுக்கும் கடந்த வாரம் ஸ்ரீலங்கா அரசு எடுத்துரைத்தது.

சமாதான நடவடிக்கைகளில் தனக்குள்ள உறுதிப்பாட்டை மீண்டும வலியுறுத்தியுள்ள ஸ்ரீலங்கா அரசு, ஆனால் இது விடயத்தில் தாங்கள் நேரடியாகவும், சிறப்பாகவும், துறைசார்ந்த முறையிலும் கையாளப்பட வேண்டும் என்றும் அதனைச் செய்வதற்கு நோர்வே அரசால் முடியும் என்றும் மீளத் தெளிவுபடுத்தியுள்ளது.

### கூட்டறிக்கை

"விடுதலைப் புலிகள் தொடர்பான சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இதில் நோர்வேயின் உயர்மட்டப் பங்களிப்பை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது." - என்று பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்ட நோர்வே - இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் அர்த்தம் இப்போது தெளிவாகியுள்ளது.

இதன் அர்த்தம் நோர்வேயின் பங்களிப்பை ஏற்பாட்டாளர் என்ற நிலையிலிருந்து தொடர்பாளர் என்ற நிலைக்கு உயர்த்துவது அல்ல. மாறாக, அது சமாதானத் 'தரகர்' என்ற பணியில் சொல்ஹெய்ம் நீடிக்கமாட்டார் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துவதாகும்.

நோர்வேயின் ஏற்பாட்டாளர் பணிக்குப் புத்துயிர் ஊட்டும் முனைகள் குறித்தும் அதற்கு தலைமை வகிப்பதைத் தீர்மானிப்பது குறித்தும் நடவடிக்கைகள் எடுப்பதில் ஜக்லண்ட் இப்போது 'பிஸி'யாக இருப்பதாக ஒஸ்லோ தகவல்கள் கூறுகின்றன. சிரேஷ்ட அதிகாரிகளின் உதவியோடு ஜக்லண்ட் தானே நேரடியாக இப்பணியை மேற்கொள்ளலாம் என்பதையும் புறந்தள்ளிவிட முடியாது.

தற்போது தேக்க நிலையில் உள்ள சமாதான நடவடிக்கைகளை சில வாரங்களுக்குள் நீக்குவதற்கான வழிவகைகள் குறித்து ஜக்லண்ட் ஆராய்ந்து வருவதாகவும் ஒஸ்லோ வட்டாரங்கள் கூறுகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தெளிவான சில நிலைப்பாடுகள் பற்றிய தகவல்களோடுதான் அவர் கொழும்பிலிருந்து ஒஸ்லோ திரும்பியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன. "தமக்கு முன்னால உள்ள தெரிவுகள், வாய்புகள் பற்றிய பட்டியலோடு அவர் ஆயத்தமாக இருக்கின்றார். அவற்றின் பெறுபேறுகள் விரைவில் வெளிப்படும்" - என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் செயற்பாடுகள் யாவும் தொடர்பாகப் புலிகளின் பிரதிபலிப்பு என்னவென்று இனிமேல்தான் தெரிய வரும். இது வெறுமனே ஏற்பாட்டாளர் நிலையிலிருந்து சொல்ஹெய்மை புறந்தள்ளும் விடயம் மட்டுமல்ல; புதிய சமாதானத் தரகர் அல்லது தரகர்கள் உருவாகும் விடயமும் கூட.

மறுபுறத்தில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு சொல்ஹெய்ம் பதில் தர முன்வருவாரா அல்லது புதிய சமாதான அணியில் கீழ்மட்ட வீரனாகப் பங்குபற்றுவாரா என்ற கேள்வியும் எழுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சாவகச்சேரி வணிகர்கள் நஷ்டஈடு கோருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன்11

சாவகச்சேரியில் யுத்த அனர்த்தங்களினால் அழிந்துபோன வர்த்தக நிறுவனங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் கழகம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. நேற்று கரவெட்டியில் நடைபெற்ற சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் கழகக் கூட்டத்திலேயே மேற்படி விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதிக்கும் இதன் பிரதிகளை வடக்கு அபிவிருத்தி, புனாவாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருடம் மே மாதம் சாவகச்சேரியில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து வணிகர்கள் தமது உடைமைகளை அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கு முற்பட்ட வேளையில் அங்குள்ள பாதுகாப்புப் படையினர் அதற்கான அனுமதியை வழங்கவில்லை.

இதனால் வணிகர்கள் தங்களுடைய உடைமைகளை மீட்க முடியாத நிலையில் இடம்பெயர வேண்டி வந்தது.

சாவகச்சேரி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் வந்த பின்னர் வணிகர்கள் தமது நிறுவனங்களுக்குச் சென்றபோது உடைமைகள் எதுவும் அங்கு காணப்படவில்லை. அத்துடன் அங்குள்ள வர்த்தக நிறுவனங்களும் சேதமடைந்து காணப்பட்டன.

இந்தத் துரதிர்ஷ்ட நிலைக்கு அரசே காரணம். இந்நிலையில் சாவகச்சேரியில் மீள வியாபாரத்தை ஆரம்பிப்பது கேலிக்குரியதாகும்.

எனவே பாதிக்கப்பட்ட சாவகச்சேரி வணிகர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்11

புதுயுகத்துக்கான மாணவர் ஆக்கத்திறன் கண்காட்சி ஒன்று இன்று காலை 9 மணி முதல் பி.ப.4 மணி வரை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசாவும் கலந்து கொள்வர்.

இந்தக் கண்காட்சியில் IIS கணனி நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் கணனிச் செய்முறை வழிகாட்டல் நிகழ்வு சிறப்பாக இடம்பெறவுள்ளது.(உ-3)

## கைதடி மக்களின் நலன் பேணும் அமைப்பு

இடம்பெயர்ந்த கைதடி மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு 'கைதடி மக்கள் நலன் பேணும் மன்றம்' என்னும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையை அடுத்த வாரம் சந்தித்து இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விளக்கவுள்ளனர். (உ-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனபாலசிங்கம் குணபூரணம்மா

வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் குணபூரணம்மா அவர்கள் நேற்று (2001-06-10) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - லச்சுமியின் அன்பு மகளும், தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், பரராஜசிங்கம், வைரவநாதர், இரத்தினபூபதி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தேவகுமார், சிவகுமார், நந்தகுமார், சாந்தகுமாரி (கனடா), விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசன் (கனடா), நிதர்சன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (2001-06-10) ஞாயிறு பிற்பகல் 3மணிக்கு விளாவேலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (88912)

தகவல்:
தனபாலசிங்கம் (கணவர்)

## திருமதி முருகையா மகேஸ்வரி

உடையாந்தோட்டம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், 5, குவாரி றோட், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகையா மகேஸ்வரி அவர்கள் கொழும்பில் நேற்று(2001-06-10) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் முருகையாவின்(உடுவில் கோட்டம்- ஊழியர், யா/அருணோதயக் கல்லூரி - அளவெட்டி) அன்பு மனைவியும் சுமதி (கொழும்பு), ரவீந்திரன்(அமெரிக்கா) ஆகியோரின் தாயாரும், இராசேந்திரம், லதாங்கினி ஆகியோரின் மாமியாரும் கஜமுகனின் அன்பு பேர்த்தியும் கணபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து, புஸ்பவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

*"சத்திய வாசம்"*
*அளவெட்டி.* (89928)

தகவல்:-
வி.முருகையா

## திருமதி தம்பிப்பிள்ளை அன்னபூரணி

கோலாலம்பூர், மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வராம்பற்றை, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை அன்னபூரணி 09.06.2001 சனிக்கிழமை இரவு 8 மணியளவில், தெஹிவளையில் அமரரானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு தம்பிப்பிள்ளை(ஓய்வுபெற்ற அதிபர், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி)யின் அன்புக் கணவரும் அமரர் சகாதேவன்(ஓய்வுபெற்ற நில அளவையாளர்), விஜயலக்சுமி (ஓய்வுபெற்ற மருத்துவ சாரிணி உத்தியோகத்தர், லண்டன்), ஸ்ரீசண்முகன் (ஓய்வுபெற்ற அரச M.L.Tயும் M.L.T.புதிய மெடிக் கிளினிக், யாழ்ப்பாணம்), விஜயராகவன் (எந்திரி, லண்டன் - மானிப்பாய்), ஜெகதாம்பாள் (R.M.O. பதிவு வைத்திய அதிகாரி - வன்னி, வவுனியா), ஜவகர் (கணக்காளர் - கண்டி), அமரன் விமலேந்திரன், இராஜகோபால் (தெஹிவளை), மங்களேஸ்வரி (லண்டன்) மற்றும் லீலா சிவனேசன் (கோப்பாய் வடக்கு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெஹிவளை மகன் இல்லத்தில் நிறைவேறி கல்கிசை இந்து மயானத்தில் 13.06.2001 காலை 10 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வறுத்தலை வளவு,*
*கோப்பாய் வடக்கு,*
*வராம்பற்றை, கோப்பாய்.*

தகவல்:
கா.த.ஸ்ரீசண்முகன்.
(மகன்)

*கா.த.இராஜகோபால்,*
*45,பிறேஷர் அவெனியூ,*
*தெஹிவளை.*
*தொலைபேசி 074 - 201584* (88930)

## பிரதமர் வாஜ்பாயைச் சந்திக்க வரும் சமயத்தில்

# முஷாரப் மீது தாக்குதல் நடத்த காஷ்மீர் தீவிரவாதிகள் திட்டம்!



### இந்தியப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை

புதுடில்லி,ஜூன்11

**பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் இந்திய விஜயத்தின்போது, அவர்மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு நன்கு பயிற்சிபெற்ற தீவிரவாதிகள் புதுடில்லிக்குள் ஊடுருவுவதாக இந்தியப் புலனாய்புத்துறை எச்சரித்துள்ளது.**

லஸ்கர்-இ-தொய்பா, ஜெய்-சி-மொஹமட், ஹிஸ்புல் முஜாஹுதின் உட்படப் பல பிரதான காஷ்மீர் தீவிரவாத அமைப்புகள் இந்தச் சதியில் கூட்டுச்சேர்ந்து ஈடுபட்டிருப்பதாகவும் -

கூலிப்படைகளைச் சேர்ந்தவர்களே சதியை நிறைவேற்ற அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

இந்தியப் புலனாய்வுத்துறை கூறியுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமாதானப் பேச்சு நடப்பதை விரும்பாத தீவிரவாத இயக்கங்கள், முஷாரப் மீது தாக்குதல் நடத்தி, சீரடைந்துவரும் இந்திய - பாகிஸ்தான் உறவுகளை அதன்மூலம் சீர்குலைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலனாய்வுத்துறையின் எச்சரிக்கையை அடுத்து புதுடில்லியில் உள்ள பஸ் மற்றும் ரயில் நிலையங்களில் பொலீஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர்.

காஷ்மீர், பஞ்சாப் ஆகிய இடங்களிலிருந்து புதுடில்லிக்கு வருபவர்கள் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியாக, இந்தமாத இறுதியில் ஜெனரல் முஷாரப் இந்தியா வந்து பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்த உள்ளார்.

அந்தச் சமயத்தில், முஷாரப் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலோ அல்லது அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலோ இரு நாடுகளிலும் இரத்த ஆறு ஓடும் நிலை ஏற்படும் என்றும் ஈடுகட்டமுடியாத பாரிய உறவுச் சிக்கலை அது உருவாக்குமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (ஒ-6-9)

## மேற்குவங்க பஸ் நிலையத்தில் 86 மண்டையோடுகள் மீட்பு!

கொல்கத்தா,ஜூன்11

இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தின் பஸ் நிலையம் ஒன்றில் கைவிடப்பட்ட பொதியில் இருந்த 86மண்டையோடுகளைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அவற்றில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் மண்டையோடுகள் உட்பட, பல்வேறு வயதுடையவர்களின் மண்டையோடுகள் காணப்படுவதாக உடல்கூற்று ஆய்வின் ஆரம்பக் கட்டச் சோதனைகளில் தெரியவந்துள்ளது.

மேற்குவங்க மாநிலத்தின் எல்லைப்புற நகரான சிலிகுரி பஸ் நிலையத்திலேயே இந்த மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளன.

சில மண்டையோடுகள் சில மாதங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டவர்களுடையவை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டையோடுகள் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடையவை என்பது தெரியவந்துள்ளது.

விபசாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு நோய்களால் பாதிக்கப்பட்ட பெண்களைக் கொன்றுவிடும் கொடூரம் அப்பகுதியில் நடைபெறுவதால், அப்படிக் கொல்லப்பட்டவர்களின் மண்டையோடுகளாக இவை இருக்கக்கூடும் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ஒ-6-9)

## பிரெஞ்சு டெனிஸ்: இந்திய ஜோடி வெற்றி

சென்னை,ஜூன்11

பிரெஞ்சு டெனிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டத்தை இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஸ் பூபதி ஜோடி வென்றது.

இந்த ஜோடி இணைந்துபெற்ற 19ஆவது பட்டம் இதுவாகும்.

மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் ஜெனிபர் கேப்ரியாற்றி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். (ஒ)

## ஜெயா ரீ.விக்கு சிறப்புச் சலுகை:

# தமிழக ஆளுநர் மாளிகை முன்பாக செய்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

தமிழக ஆளுநர் மாளிகை முன்பாக செய்தியாளர்களும் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா, ஆளுநர் பாத்திமா பீபி யைச் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பைப் படம்பிடிக்கவும், செய்தி சேகரிக்கவும், ஜெயா ரீ.வி. என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

தி.மு.க.பிரமுகர் முரசொலிமாறனின் மகன் கலாநிதி மாறனின் சன் ரீ.வி. உட்பட மற்றைய தனியார் தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகளின் செய்தியாளர்களுக்கு ஆளுநர் மாளிகைக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அனுமதி மறுக்கப்பட்ட செய்தியாளர்கள் தமிழக அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.

ஜெயா ரீ.வி. அலுவலகம் ஜெயலலிதாவின் வீட்டில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, தேர்தலில் போட்டியிடத் தகுதிபெறாத ஜெயலலிதாவை முதல்வராக அனுமதித்ததால் விமர்சனங்களில் சிக்கியிருக்கும் தமிழக ஆளுநர் பாத்திமா பீபி, தற்போது செயதியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் மேலும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. (ஒ-6-9)

# நீதிமன்றத்தில் சமுகமளிக்காத பெனாஸிருக்கு 3 வருடச் சிறை!

இஸ்லாமாபாத்,ஜூன்11

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. இஸ்லாமாபாத்தில் செயற்பட்டு வரும் லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் பெனாஸிர் மீதான இந்தத் தண்டனையை அறிவித்தது.



நீதிமன்ற அழைப்பாணைகளுக்கு பெனாஸிர் பதிலளிக்கத் தவறிய குற்றத்துக்காகவே இத் தண்டனை வழங்கப்பட்டது.

தனது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாக பெனாஸிர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, லஞ்ச ஒழிப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தற்சமயம் பாகிஸ்தானுக்கு வெளியே நாடுகடந்து வாழும் பெனாஸிர் பூட்டோ இதுவரை அந்த வழக்கில் நேரில் சமுகமளிக்கவில்லை. இதனாலேயே அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலியர், பலஸ்தீனரிடையே

# மேற்குக்கரை மோதல் குறித்து மீண்டும் பேச்சுகள் ஆரம்பம்

காஸா,ஜூன்11

மேற்குக்கரை நகரான ரமழாவில் இஸ்ரேலியரும், பலஸ்தீனரும் பங்குபற்றும் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை நேற்று ஆரம்பித்தது.

அமெரிக்கப் புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏயின் தலைவர் ஜோர்ஜ் டெனிட் மேற்பார்வையில் புதிய பேச்சுவார்த்தை ஆரம்பித்தது.

இரு தரப்புகளுக்கும் பொதுவான சண்டை நிறுத்தம் ஒன்றை வெளியிட்டு, அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகப் பேச்சில் ஆராயப்படும். ஏற்கனவே பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ஒரு வார காலப் போர்நிறுத்தத்தை 3 நாள்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மேற்குக்கரைப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா அளித்துள்ள செயற்றிட்டத்தின் அடிப்படையில் பலஸ்தீனரும், இஸ்ரேலியரும் பேச்சுக்களை நடத்த உடன்பட்டுள்ளனர்.

உலக அரங்கில்

இதற்கிடையில், காஸா நகரத்தின் தெற்கே யூதக் குடியிருப்பு ஒன்றிலிருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பலஸ்தீனப் பெண்கள் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம் மேற்குக்கரைப் பகுதிகளில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நிகழ்ந்து வரும் மோதல்களில் இதுவரை 800 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பலஸ்தீனர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### நேபாளத்தில் நிலச்சரிவு!

நேபாளத்தின் சாங்கோபா மாவட்டம் காட்பாடியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் 13 பேர் மண்ணில் புதையுண்டு இறந்தனர். உயிரிந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் அடங்குவார்கள். பலத்த மழை காரணமாகவே நிலச்சரிவு ஏற்பட்டது. (ஒ)

# காஷ்மீர மசூதியில் கிரனேட் தாக்குதல்: 4 முஸ்லிம்கள் பலி; 50பேர் காயம்!

ஸ்ரீநகர்,ஜூன்11

ஜம்மு காஷ்மீரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் 4 முஸ்லிம் கொல்லப்பட்டனர்; ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இனந்தெரியாத ஆயுதபாணிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், உள்ளூர் பொலீஸாராலேயே கைக்குண்டு வீசப்பட்டதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டைப் பொலீஸார் மறுத்துள்ளனர்.

மசூதி மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலை பாகிஸ்தான் கண்டித்துள்ளது. முஷாரப் - வாஜ்பாய் சந்திப்புக்கு முன்னர், இத்தகைய சம்பவங்களைத் தடுத்து, சீரான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்துமாறு பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சு இந்தியாவிடம் கோரியுள்ளது. (ஒ-6-9)

## நேபாள அரசகுடும்பப் படுகொலை விவகாரம்:

# நேரில் கண்ட சாட்சியான சாஹியா திடீரென்று மாயம்!

காத்மண்டு,ஜூன்11

நேபாள அரசகுடும்பப் படுகொலைகளை நேரில் கண்ட சாட்சியான கப்டன் ராஜிவ் சாஹியா திடீரென்று காணாமல் போயுள்ளார்.

மறைந்த மன்னர் பிரேந்திராவின் தம்பி இளவரசர் திரேந்திராவின் மருமகனான சாஹியா இருக்கும் இடம் தெரியவில்லை என்று அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் சாஹியா பேசினார்.

அரச குடும்பத்தவரைப் பட்டத்து இளவரசர் திபேந்திராவே சுட்டுக் கொன்றதாகவும் -

புதிய மன்னர் ஜியனேந்திராவின் புதல்வர் பராஸ் அரச குடும்பத்துப் பெண்கள் பலரை திபேந்திராவின் துப்பாக்கிச் சூட்டிலிருந்து காப்பாற்றியதாகவும் -

அப்போது சாஹியா கூறியிருந்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பின் பின்னர் சாஹியா தற்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை.

இது அரச குடும்பப் படுகொலைகள் தொடர்பான சந்தேகங்களை மேலும் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில்,

அரச குடும்பப் படுகொலைகள் குறித்துச் சாட்சிகள் பகிரங்கமாக எங்கும் கருத்துத் தெரிவிக்கக்கூடாதென்றும் -

அது தொடர்பாக விசாரணை நடத்திவரும் குழுவிடம் மட்டுமே கூற வேண்டும் என்றும் -

அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம்,

ஐக்கிய மக்கள் முன்னணித் தலைவரும், நேபாள நாடாளுமன்ற உறுப்பினருமான லீலாமணே பஹரால், படுகொலைகள் தொடர்பான விடயங்களை அரசாங்கம் மூடி மறைக்க முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை வலியுறுத்தி பேரணி ஒன்றை அவரது கட்சியினர் நேற்று நடத்தினர்.

# ரஷ்யத் தலைநகர் அருகே ஏவுகணைத் தளத்தில் தீ!

மொஸ்கோ,ஜூன்11

ரஷ்யாவில் ஏவுகணைப் பாதுகாப்புத் தளத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 3 ஏவுகணைப் பிறப்பாக்கிகளும், 12 ஏவுகணைகளும் சேதமடைந்தன.

தலைநகர் மொஸ்கோவுக்கு அப்பால் அமைந்துள்ள எஸ்-300 ஏவுகணைப் பாதுகாப்புத் தளத்திலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் -

ஏவுகணைகள் யாவும் பாதுகாப்புடன், அடிவானை நோக்கிய நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தால், தீ விபத்தின் போது, தாமாகவே ஏவப்பட்டிருக்கக் கூடும் என்று கூறிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர், அதிர்ஷ்டவசமாக அத்தகைய நிலை உருவாகவில்லை என்று தெரிவித்தார்.

ஏவுகணைப் பிறப்பாக்கி ஒன்றில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறே தீ விபத்துக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ஏவுகணைத் தளத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அதன் சிதைவுகள் காணப்பட்டன. (ஒ-6-9)

## தமிழக அமைச்சரவையில் திடீர் மாற்றம்

சென்னை,ஜூன்11

தமிழக முதல்வர் ஜெயலலிதா பதவியேற்று, ஒருமாத காலம் முடிவடையாத நிலையில், அமைச்சரவையை இரண்டாவது தடவையாக மாற்றியமைத்துள்ளார்.

அய்யாறு வாண்டையார், ஜெயராமன், ஆர்.விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக சட்டமன்றத்துக்கு முதற்றடவையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான மூன்று உறுப்பினர்கள் அமைச்சரவையில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ)

# யாழ். பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்து உழைத்த உத்தமர் துரைராசா

## பல்கலைக்கழக - சமூக உறவை உருவாக்கிய முன்னோடி அவரே

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்

அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா யாழ். பல்கலைக்கழகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் கல்விசார் உலகத்துக்கும் ஆற்றிய சேவையை நாடு நன்கறியும். யாழ். பல்கலைக்கழகத்தின் புகழ் பூத்த துணைவேந்தராக அவர் கருதப்படுகின்றார்.

இன்றுமலர் மெத்தையாகக் காணப்படும் துணைவேந்தர் சிம்மாசனம், அன்று—பேராசிரியர் துரைராசா காலத்தில்—முள் மெத்தையாக இருந்தது. கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடாதிபதி பதவியை விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு சேவை செய்ய வந்தார் அவர்.

அவர் பதவி ஏற்கும் போது இந்திய சமாதானப் படை இங்கு வந்திருந்தது. ஓர் உள்நாட்டுப் போரினை மக்கள் அனுபவித்து இருந்தார்கள். இடப்பெயர்ச்சி, உயிர்ச்சேதம், மாணவர்களின் உயிரிழப்பு, பொருளாதார அழிவு என்று பல பிரச்சினைகளை எதிர் நோக்கிய காலம் அது. இந்நிலையில் அவர் துணிந்து பதவியேற்றார். ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்துக்கு வருவதற்குக் கார் பயன்படுத்திய போதிலும், பின்பு பெற்றோல் இல்லாத காரணத்தால் நெல்லியடியில் இருந்து சமானியனைப் போல சைக்கிளில் வந்து போய் கடமையாற்றினர். இதன் காரணமாகத்தான் விரைவில் நோய் வாய்ப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பேராசிரியராகவும் பின்பு அப்பீடத்தின் பீடாதிபதியாகவும் அதன் பின் திறந்த பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றினார். அவருடைய கல்விசார் தகைமை மிக ஆழமானது. கலாநிதிப் பட்டத்துக்கு அவர் மேற்கொண்ட ஆய்வு அவருக்கு தேசிய ரீதியில் மட்டுமல்லாமல் உலகப் பல்கலைக்கழகங்களிலும் காத்திரமாக மதிக்கப்பட்டது. இன்றும் மதிக்கப்படுகிறது.

பேராசிரியர் அவர்கள் பதவியேற்ற காலத்தில் இந்தியப்படை காரணமாக சில மாணவர்களின் உயிரிழப்பு, மாணவர்கள் கண்ட மாதிரி கைது செய்யப்படக் காரணமாக, ஒரு நாளில் பல மணித்தியாலங்கள் அமைதிப்படை முகாம்களில் காத்திருப்பதில் சென்றது. அந்நாள்களில் முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன், முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கணேசலிங்கம், முன்னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் பால



சுப்பிரமணியம் ஆகியோரும் அப்போதைய சிரேஷ்ட மாணவ ஆலோசகரும் துணைவேந்தருக்குத் துணை நின்றார்கள். பின்னர் இந்தியப் படையுடன் ஒரு சுமுக உறவை ஏற்படுத்தி நிர்வாகத்தில் கவனம் செலுத்தினார். பல்கலைக்கழகத்தில் விவசாய பீடம் ஒன்றினை உருவாக்கி கிளிநொச்சியில் இயங்க வைத்தார். அங்கும் சைக்கிளிலேயே சென்று வந்தார். பொறியியற் பீடம் ஒன்றினை முறிகண்டியில் உருவாக்க ஆரம்ப முயற்சிகள் எடுத்தார். பொறியியல் பீடத்துக்கென ஒரு பொறியியல் பேராசிரியரை நியமித்தார். மேலும் மீன்பிடியியல் பீடத்தினை முல்லைத்தீவில் உருவாக்க முயற்சிகள் எடுத்தார்.

ஆயினும் நாட்டு நிலைமை காரணமாக உருப்படாமல் போய்விட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஆராய்ச்சிகளுக்கென நிதி ஒதுக்கிச் செயற்பட ஒரு சபையை நிறுவினார். இன்றுவரை பெரும்பாலான ஆசிரியர்கள் இதனால் பலன் பெறுகிறார்கள். ஆசிரியர்களின் நூல்களைப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்று வெளியிட வைத்தவர். இதனால் ஒரு சில ஆசிரியர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டனர். ஆனால் இவர்களில் பலர் அவரை மறந்து விட்டார்கள் என்றே கொள்ளவேண்டும்.

### மாணவருக்கு நல நிதியம்

மாணவர்களுக்கென அவர் ஒரு முக்கியமான பணியை ஆரம்பித்து வைத்தார். அதுதான் துணைவேந்தர் நல நிதியம். தன்னோடு படித்தவர்கள். தன்னிடம் படித்தவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கு நேரிலும் கடித மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் தனது திட்டத்தைத் தெரிவித்தார். வெளிநாட்டில் இருந்து பணம் வந்து சேர ஆரம்பித்தது. வறிய மாணவர்களுக்கு நிதியுதவி வழங்க ஆரம்பித்தார்.

அப்போதைய சிரேஷ்ட மாணவர் ஆலோசகர்தான் வறிய மாணவர்களை அடையாளப்படுத்திக் கொடுப்பார். ஆயினும் துணைவேந்தருக்கு ஒரு கவலையிருந்தது. உண்மையில் வறிய மாணவர்களுக்கு இந்த உதவி போய்க்கிடைக்கிறதா என்பது தான் அந்தக் கவலை இன்று துணைவேந்தர் நல நிதியம் பல இலட்ச ரூபாய்களைப் பெற்றுவருகிறது. மாணவர்களுக்கு கொடுத்தும் வருகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களைக் கொண்டு போர்க் காலத்தில் ஒவ்வொரு மாணவரும் 500 ரூபா வீதம் பெற வைத்தார். மாணவர்களுக்கு சேட்டுக்களும், மாணவிகளுக்கு சேலைகளும் வழங்க வகை செய்தார் அப்போது எரிபொருள் கிடைக்காத காலம். ஜாம் போத்தல் விளக்கு விலைப்பட்ட நேரம். மண்எண்ணெய் குறிப்பிட்ட அளவு வீதம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மாணவர்கள் இரவில் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு டீசல் ஜெனரேட்டர்கள் பாவிக்கவும் வசதி செய்தார். இதனால்தான் அவர் அமரராகிய

> **இன்று அவரது 11 ஆவது நினைவு தினம்**

போது கதறாத மாணவர்கள் இல்லையென்று கூறலாம்.

பொருளாதார ரீதியில் நாம் வாழும் பிரதேசத்துக்கு திட்டங்களை எழுத்து வடிவில் உருவாக்கினார். மூலவளம், அபிவிருத்திக்கான வாய்ப்பு, — வாய்ப்பீனம் ஆகியவை மற்றும் விவசாயம், நிலப் பயன்பாடு, மீன்பிடித்துறை, போக்குவரத்து, கட்டட நிர்மாணம், கிராம, நகர அமைப்பு என்பன குறித்த, கலந்துரையாடல்கள் மாதம் தோறும் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்று அறிக்கை ரீதியிலும் சமர்ப்பிக்கப்பட்டன. இக்கலந்துரையாடல்களில் பல்கலைக்கழக அறிஞர்களும் அரசாங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இவ்வாறு அவரது பல சேவைகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

### பல்கலைக்கழகமும் சமூகமும் ஒன்றிணைந்தன

அவருடைய காலத்தில் பல்கலைக்கழகமும் சமூகமும் ஒன்றிணைந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயம். பல்கலைக்கழகத்தில் ஒரு மக்கள் வங்கிக் கிளையையும் செயற்பட வைத்ததும். இராமநாதன் நுண்கலைக்கழகம் வளர்ந்து இந்நிலைக்கு வரவும் அவர்தான் காரணம்.

தமக்கு மரணகாலம் நெருங்கிவிட்டது; தாம் விரைவில் இறக்கப்போவது நிச்சயம் என்று பேராசிரியர் துரைராசா மரணமடைவதற்கு முன்னர் அடிக்கடி கூறி வந்தார். அப்படியே இறந்து விட்டார், அவர் இறக்கும் போது துணைவேந்தராக இல்லாதுவிட்டாலும், பதவிக் காலம் முடிய முன்னரே பதவி விலகிவிட்டாலும் பல்கலைக்கழக சமூகம் துக்கித்து நின்றது. ஆறு வருடங்கள் இரு தடவை துணைவேந்தராக இருந்து சேவையாற்றிய பேராசிரியர் துரைராசா அவர்களை இன்றைய பல்கலைக்கழக மாணவ சமூகம் போற்றுவதற்கு மறந்துவிட்டது. ஜூன் 11ஆம்திகதி அவருடைய அமரத்துவ தினமாகும். இத்தினத்தில்வருடாவருடம் நினைவுப் பேருரை நடத்துவதற்கு பல்கலைக்கழகம் தீர்மானித்து இன்று நினைவுப் பேருரையை நடத்த நடவடிக்கை எடுத்த போதும் இம்முறை நிறைவேற்ற முடியவில்லை. மொறட்டுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் நினைவுரையை நிகழ்த்த சம்மதம் தெரிவித்த போதும் யாழ்ப்பாணம் வருவதற்கு யோசித்து டிசம்பர் மாதம் வைக்கலாமா என்று கேட்டுள்ளார். அது குறித்து பல்கலைக்கழகமே முடிவெடுக்கும்.

'வளர்க பேராசிரியர் துரைராசா புகழ்'

---

#### பேச்சுக்கு முட்டுக்கட்டையாக இருக்குமானால்

# புலிகள் மீதான தடையை அரசு தற்காலிகமாகவேனும் நீக்கட்டும்

### காணாமற்போன படையினர் சங்கப் பிரதிநிதி

விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடை சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக இருக்குமானால் அரசாங்கம் அதனைத் தற்காலிகமாக வேனும் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணமாற்போன, படையினரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத் தலைவர் ஈ. பி. நாணயக்கார இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமாதானத்தை ஏற்படுத்த தடை நீக்கக்கோரிக்கையைக் காரணம் காட்டி அரசாங்கமோ புலிகளோ பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது.

இன்று புலிகள் மீதான தடையை நீக்குவதா? இல்லையா? நீக்குவது அவசியம் தானா? என பல்வேறு கோணங்களில் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெறுகின்றன.

இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் நோர்வே உயர் மட்டத்தில் பங்களிப்புச் செய்ய முன் வந்திருப்பது சமாதானம் வெகுதொலைவில் இல்லை என்பதையே உணர்த்துகின்றது.

தமது இயக்கத்தின் மீதான தடையைக் காரணம் காட்டி பேச்சுவார்த்தை என்ற மேசைக்கு வருவதைப் புலிகளும் தாமதப்படுத்தக் கூடாது — என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

# மட்டு. புலிகளின் பகுதிக்கு 75 சிங்களஇளைஞர்கள் விஜயம்

மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் ஏற்பாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த 75 சிங்கள இளைஞர்கள் அடங்கிய குழு ஒன்று மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாடற்றபகுதிக்கு விஜயம் செய்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அங்கு விஜயம் செய்துள்ள இந்தக் குழுவினர் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடுவர்.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் அங்கு நடைபெறும் நிகழ்வுகளிலும் இவர்கள் பங்குபற்றுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-7)

# ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு

ஈழமக்களின் விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி தமது இன்னுயிரை ஈர்த்த, ஈர்த்துக்கொண்டிருக்கும் போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் தியாகத்தை நினைவு கூரும் முகமாக ஈ. பி. ஆர். எல். எவ். (சுரேஷ் அணி) வருடா வருடம் அனுஷ்டித்துவரும் தியாகிகள் தினம் இவ்வாண்டு எதிர்வரும் 19 ஆம் திகதி கொண்டாடப் படவுள்ளது.

இதையொட்டி ஏற்பாடு செய்துள்ள விளையாட்டுப் போட்டிகள் கடந்த 6 ஆம் திகதி மன்னாரில் ஆரம்பமாகின.

இலங்கை வங்கியின் மன்னார் கிளை முகாமையாளர் ஜே. மைக்கல் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாகாணக் கொடியை ஏற்றி வைத்தார். அதைத் தொடர்ந்து கட்சியின் பிராந்தியப் பொறுப்பாளர் எஸ். ரெட்ணசிங்கம் குமரேஷ் கட்சிக் கொடியை ஏற்றினார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி மன்னாரில் இடம்பெறும் இறுதி நாள் நிகழ்வில் கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொள்வார். (ஐ-3)

## விளையாட்டு

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச்சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு உரும்பிராய் வைத்தீஸ்வரா விளையாட்டுக்கழகமும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்துக்குள் போட்டி இடம்பெறும். (க-86)

## நிகழ்வுகள்

★ ★ ★

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரித்தினத்தை ஒட்டிய மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் இடம் பெறும் கல்லூரி தின விழாவில் வைத்து வழக்கப்படவுள்ளன. (ஐ-3)

## உதயன்

### ஆள் மாற்றம் பயன் தருமா?

இலங்கையின் இன விவகாரம் தொடர்பான சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் உழைத்தவர் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம். சமாதானப் பேச்சுவார்த்தை எவ்வாறேனும் தொடங்க வேண்டும் என்பதில் மிக ஆர்வமாகப் பாடுபட்டவர் அவர்.

இப்போது, திடீரென அவர் அந்தப் பணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டிருக்கிறார். சொல்ஹெய்முக்குப் பதிலாக நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஐக்லண்டே இனிமேல் (பிரதான) சமாதானப் பேச்சாளர்ப் பணியைச் செய்யவுள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்தி, இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவுவதற்கு பல வெளிநாடுகள் முன்வந்தன; விருப்பம் தெரிவித்திருந்தன. கனடா, பிரிட்டன், நோர்வே அவற்றில் குறிப்பிடத்தக்கவை. நோர்வேயையே இரண்டு தரப்புகளும் - அரசாங்கத்தினரும் விடுதலைப் புலிகளும் - விரும்பிக் கேட்டனர்.

அதனைத் தொடர்ந்து அனுசரணையாளர் பணியைச் செய்யும் சிறப்புத் தூதுவராக எரிக் சொல்ஹெய்மை நோர்வேயின் அப்போதைய அரசு நியமித்தது.

இடையில் - தேர்தலின் பின்னர் - நோர்வேயில் ஆட்சிப் பொறுப்பு மாற்றுக் கட்சியிடம் சென்றது. எனினும் புதிய அரசாங்கம் ஆளை மாற்றவில்லை. எதிர்க்கட்சி ஆதரவாளராக இருந்தபோதிலும், சொல்ஹெய்ம் அனுசரணையாளர் பணியை சிறப்பாக ஆற்றக்கூடிய ஆற்றல் உள்ளவர் என்பதால் அவரையே அப்பணியை செய்ய அனுமதித்தது.

ஆனால் இலங்கை அரசாங்கம் இப்போது கொடுத்த 'அரிகண்டத்தை'யும் ஆக்கினையையும் பொறுக்க முடியாமல் நோர்வே அரசும் சொல்ஹெய்மை அவரது பணியில் இருந்து புறந்தள்ளிவிட்டது. சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக நடந்து கொள்கிறார் என்று நோர்வே நாட்டிடம் கோள் சொல்லி தான் நினைத்ததை சாதித்திருக்கிறது சந்திரிகா அரசு.

நோர்வே நாடு அனுசரணையாளராகப் பணிபுரிய உள்ளது என்ற தகவல் வந்ததுமே, தெற்கின் சிங்கள - பௌத்த பேரினவாதிகள் அந்த நாடு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நாடு; அவர்களுக்குச் சார்பாகவே நடந்துகொள்ளும்; அதனை இதிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று கூக்குரலிட்டார்கள்.

ஏன், கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்துக்கு எறி குண்டு வீசினார்கள். பேரணி நடத்தி அந்த நாட்டின் தேசியக் கொடியை எரித்தார்கள். இங்குள்ள நோர்வேத் தூதுவரை நாடு கடத்த வேண்டும் என்று கூடக் கத்தினார்கள்.

இலங்கை அரசுகள் - பௌத்த - சிங்கள பேரினவாதத்தினால் ஆட்கொள்ளப்பட்டு அவர்களுக்குச் சார்பாகச் செயற்படுவது ஒன்றும் புதிதல்ல. சந்திரிகா அரசும் அதே வழியில் செயற்படுவதாயின், நோர்வே அரசையே அனுசரணையாளர் பணியில் இருந்து விலகிச் செல்லுமாறு கேட்டிருக்கவேண்டும்.

தம்மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கிய பின்னரே பேச்சுக்கு வர முடியும் என்று விடுதலைப் புலிகள் சொல்வது நியாயமானதே; அரசு அவ்வாறு செய்வதே உகந்தது என்று சொல்ஹெய்ம் கருத்துக் கூறியதும் -

சமாதான முயற்சிகள் தடங்கலுற்று நிற்பதற்கு அரசாங்கமே காரணம் என்று உண்மையைக் கூறியதுமே - சொல்ஹெய்மை புறந்தள்ளுமாறு சந்திரிகா அரசு 'மூட்டிக் கொடுத்ததற்குப் பின்னணி என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழர்களின் எந்த விவகாரத்திலும் பிரச்சினையிலும் நியாயம், உண்மை உட்பட்ட நீதி நெறிமுறைகளை அரசு கருத்தில் கொள்வதில்லை.

அந்தப் பழக்கத்தில் சொல்ஹெய்ம் நியாயம், உண்மை, உகந்த வழி என்று கூறியது அரசுக்குப் பிடிக்கவில்லை. அவரைப் பழிவாங்கி விட்டது. நோர்வேயும் முன் வைத்த காலை பின்வைக்க விரும்பாமல் கோயில் மாடு போலத் தலையாட்டியிருக்கிறது. ஆளை மாற்றுவதினால் மாற்றம் ஏதாவது வருமா என்பதைனப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

பெருமளவிலான நிதி மோசடி அம்பலம்

# மின்சார சபை அதிகாரிகள் இருவருக்கு கட்டாய லீவு

கொழும்பு,ஜூன்11

இலங்கை மின்சார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளரும் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையில பெருமளவில் நிதி மோசடி இடம்பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தலைமையிலான அரசாங்க நிறுவனங்கள் தொடர்பிலான நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படியே இவர்கள் இருவரும் கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் இருவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையில் பெருமளவிலான பணம் கையாடப்பட்டிருப்பதாக 'கோப்' குழுவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரித்ததன் பின்னரே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## சுற்றிவளைப்புத் தேடுதல்

சுதுமலை,ஜூன்11

மானிப்பாய், சுதுமலை, தாவடிப் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தினர்.

வீதியால் செல்பவர்கள் கடுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்பே வெளியேற அனுமதிக்கப்பட்டனர். (ம-139)

## கொடிகாமத்தில் தபால்கள் தேக்கம்

கொடிகாமம்,ஜூன்11

கொடிகாமம் அஞ்சலகத்தில் சாதாரண மற்றும் பதிவுக் கடிதங்கள் தேங்கிக்கிடப்பதாகவும் - உரியவர்களை தாமதமின்றி அவற்றைப் பெற்றுச் செல்லுமாறும் அஞ்சல் அதிபர் கேட்டுள்ளார்.

(க-7)

## நாட்டு நடப்பு

'பகிடி வதை' - I

பொங்கு தமிழ் கண்டீர்கள்
பொங்கிற்று உள்ளமெல்லாம்
மங்குவது தமிழ்ப் பண்பேயென்றால்
மானம்தான் போகாதன்றோ!
இங்கினிப் பகிடிவதைக்கு என்றும்
இடமில்லை என்றால் மட்டும்
பொங்கிய தமிழ் உணர்வுக்கு
பொருளுண்டு பலனுமுண்டு.

*- விகடகவி -*

# தென்னிந்திய நடிகர்களுக்கு பௌத்த பிக்குகள் மிரட்டல்!

## படப்பிடிப்பைக் கைவிட்டு நாடு திரும்பினர்

கொழும்பு,ஜூன்11

தமிழகத்திலிருந்து படப்பிடிப்பொன்றுக்காக இலங்கை வந்திருந்த தமிழ் சினிமா நடிகர், நடிகைகளுக்கு விடுக்கப்பட்ட மிரட்டலை அடுத்து அவர்கள படப்பிடிப்பை இடை நடுவில் நிறுத்தி விட்டு உடனடியாக தாயகம் திரும்பியுள்ளனர்.

படப்பிடிப்பாளர்களுக்கும், பௌத்த பிக்குகள் சிலருக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையே இவர்கள் உடனடியாக இந்தியா திரும்புவதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் தமிழகத்திலிருந்து "மாயன்" என்ற தமிழ்த் திரைப்படத்தின் வெளிப்புறக் காட்சிகளை படமெடுப்பதற்காக நடிகர்கள் நாசர், 'தலைவாசல்' விஜய், நடிகை ரஞ்சிதா உடபட சிலர் இலங்கை வந்திருந்தனர்.

கடந்த புதன்கிழமை வெளிப்புறக் காட்சிகள் எடுப்பதற்காக இவர்கள் பொலநறுவுக்குச் சென்றுள்ளனர். பொலநறுவவில் இவர்கள் தங்கியிருந்தபோது பொலநறுவையிலுள்ள பிரமுகர் ஒருவர் படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிக, நடிகைகளையும் படத் தயாரிப்பாளர்களையும் மதியபோசன விருந்துக்கு அழைத்திருந்தார்

ஆனால் திரைப்படக் கோஷ்டி அவரது அழைப்பை ஏற்கவில்லை.

மறுநாள் பொலநறுவையிலுள்ள விகாரையொன்றிற்கு அருகே படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது பௌத்த பிக்குகள் சிலர் படப்பிடிப்பில கலந்து கொண்டவர்களைப் பயமுறுத்தியுள்ளனர்.

பௌத்த சமயத்திற்கெதிராகப் பிரசாரம் செய்யவே இத்திரைப்படம் எடுக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் மீது சுமத்தி ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வீடியோ நாடாக்களையும் பறித்துள்ளனர்.

இரு கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற வாக்குவாதத்தின் போது படப்பிடிப்பாளர்கள் சிலர் பௌத்த பிக்குகளால் தாக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இதனால் பயமும் விரக்தியுமடைந்த திரைப்படக் கோஷ்டியினர் படப்பிடிப்பை ரத்துச் செய்துவிட்டு உடனடியாகக் கொழும்பு திரும்பி விட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை விமானம் மூலம் தமிழ் நாட்டிற்குத் திரும்பி விட்டனர்.

# இனக் கலவரங்கள் ஏற்பட்டால் அடக்க விசேட பொலீஸ் பிரிவு

இனக்கலவரங்கள் ஏற்படும் போது அவற்றை அடக்கி அமைதியை நிலைநாட்டுவதற்கென சகல இனங்களையும் உள்ளடக்கிய விசேட பொலீஸ் பிரிவு ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இது குறித்து இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அத்தாவுட செனிவிரதன பொலீஸ் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றார் எனத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

சிறுபான்மை இனத்தவர்கள் பெருமளவில் வசிக்கும் பிரதேசங்களில் பெரும்பான்மை பொலீஸ் உயர் அதிகாரிக்கு அடுத்த படியாக சிறுபான்மையினத்தவரைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை நியமிப்பது குறித்தும் -

இனக்கலவரங்கள் ஏற்படும் போது பாரபட்சமின்றி செயற்பட்டு அமைதி, நீதி நியாயத்தை நிலைநாட்ட சகல இனங்களையும் சேர்ந்த பொலீஸ் அதிகாரிகளை நியமிப்பது குறித்தும்-

அமைச்சர் பொலீஸ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவருகின்றார் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

# அரச நிறுவனங்களில் மோசடியை தடுக்க அமைச்சர்கள் குழு

கொழும்பு,ஜூன்11

அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் நிலவும் மோசடிகள் மற்றும் மக்களுக்கு சேவை செய்வதைப் புறக்கணித்தல் என்பனவற்றை கண்டு பிடிப்பதற்காகப் பிரதியமைச்சர்களை கொண்ட திடீர் சோதனை பிரிவொன்றை அமைப்பதற்கான அனுமதி ஜனாதிபதியிடம் கோரப்படவுள்ளது.

அரசின் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல உதவுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமென பிரதி அமைச்சர்களின் அமைப்பு செயலாளர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்கும் பிரதியமைச்சர்கள் கொண்ட குழுவே இதற்கான அனுமதியை ஜனாதிபதியிடம் கோரும் என அவர் தெரிவித்தார்.

சுமார் 38 பிரதி அமைச்சர்களைக் கொண்ட இந்த அமைப்பு கடந்த மாதம் நிறுவப்பட்டது. நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுவதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. இவற்றை தடுப்பதும் சம்பந்தப்பட்டவர்களை பிடிப்பதுமே திடீர் சோதனைக் குழுவின் நோக்கம் எனவும் ஏக்கநாயக்க தெரிவித்தார். (ஐ-7)

காங்கேசன் முகாம் கைதியின் தகவல்

# ஷெல் விழுந்து படகு பிளந்தது; நான் கடலில் விழுந்து தப்பினேன்

## ஏனைய நால்வருக்கும் என்ன நடந்ததோ தெரியாது

யாழ்ப்பாணம்,ஜூன்11

மண்டைதீவு கடற்பகுதியில் நாங்கள் சென்று கொண்டிருந்த படகு மீது ஷெல் விழுந்து படகு பிளந்தது. இதில் சென்ற 5 பேரில் நான் மட்டுமே கடலில் விழுந்து தப்பிப் பிழைத்து விட்டேன். ஏனைய நால்வருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

- இவ்வாறு குருநகர் இறங்குதுறையில் ஏப்ரல் 24ஆம் திகதி படையினரிடம் சரணடைந்த படகோட்டியான செல்வராசா செல்வரஞ்சன் என்பவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அதிகாரியிடம் தெரிவித்தார்.

தற்பொழுது காங்கேசன்துறையிலுள்ள பயங்கரவாதத் தடுப்பு பிரிவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அதிகாரி என்.ஜீவேஸ்வராவிடம் மேலும் கூறியதாவது:-

ஏப்ரல் 23ஆம் திகதி இரவு 8 மணியளவில் பூநகரியிலிருந்து மண்டைதீவு நோக்கி எட்டுப் பேருடன் எமது படகு புறப்பட்டது.

இரவு 12.40 மணியளவில் மண்டைதீவுப் பாலத்தில் மூன்று பேர் படகிலிருந்து இறங்கிய பின்னர் மீண்டும் 5 பேருடன் பூநகரி நோக்கி படகைச் செலுத்திக் கொண்டிருந்தபோது திடீரென வந்த 'ஷெல்' ஒன்று எமது படகின் நடுப்பகுதியில் விழுந்தது. இதனால் படகு பிளவுண்டது. படகில் இருந்த ஐந்து பேரும் என்னவானார்கள் என்பது எனக்குத் தெரியாது. கடலில் தூக்கி வீசப்பட்ட நான், நீந்தியவாறு குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தேன்.

அடுத்த நாள் காலை (24ஆம் திகதி) அங்குள்ள இராணுவத்தினரிடம் சரணடைந்தேன். அவர்கள் என்னை விசாரணை செய்த பின்னர் பலாலி இராணுவத் தளத்துக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு ஒரு மாதம் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். இந்த வேளையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் என்னை வந்து பார்வையிட்டு சோப் மற்றும் உடுப்புகள் வழங்கினார்கள்.

பின்னர் கடந்த மாதம் 28ஆம் திகதி காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டேன்.

அச்செழு வடக்கினைச் சேர்ந்த நான் வன்னியில் ஜெயபுரம் பகுதியில் றஞ்சன் குடியிருப்பில் வசித்து வந்தேன். படகோட்டியாக வேலை செய்தும் வந்தேன் என்று கூறினார்.

(க-5)

## நாளை

வைகாசி 29
செவ்வாய்க்கிழமை
திதி: ஷஷ்டி
பிற்பகல் 4.12 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முற்பகல் 10.27 வரை.
சுபநேரம் : 10.22 - 11.52
ராகுகாலம் : 2.52 - 4.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

காதை நம்புவதைக் காட்டிலும் கண்ணை நம்புவது மேலானது.

# மனித உரிமைக் குழுவுக்கு முறையீடு

கொழும்பு,ஜூன்11

'லண்டன் ரைம்ஸ்' செய்தியாளர் மேரி கொல்வின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைவதற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள ஆறு சந்தேகநபர்களின் உறவினர்கள் மனித உரிமைக் குழுக்களுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் எவையும் சுமத்தப்படவில்லை என்றும் அவ்வாறாயின் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

(க)


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

ஆசிரியர்களே! இந்த ஆசிரியையைப் பின்பற்றி கல்விக் கூடங்களில் கண்ணிவெடி குறித்த விழிப்புணர்வைக் கருத்தோடு பரப்பிடுங்கள்!!












இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் அவையின் (Editor's Guild of Sri Lanka) 2000 ஆண்டு விருது வழங்கும் வைபவம் அண்மையில் மௌண்ட் லவேனியா ஹொட்டேலில் நடைபெற்றது. அச்சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கடந்த வருடத்தின் கஷ்டமான சூழ்நிலையில் பணியாற்றிய சிறந்த பத்திரிகையாளருக்கான பேராசிரியர் கே.கைலாசபதி விருது மறைந்த யாழ்ப்பாணச் செய்தியாளர் ம.நிமலராஜனுக்கு வழங்கப்பட்டது. அவரது குடும்பத்தவர் சார்பில் நிமலராஜனின் சகோதரி விருதினைப் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்தில் காணலாம்.

சிறந்த தமிழ்ப்பத்திரிகை வடிவமைப்புக்கான விருது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'பாதுகாவலன்' கத்தோலிக்கப் பத்திரிகைக்குக் கிடைத்தது. அதன் ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை விருதினைப் பெறுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

'ஆதவன்' ஆசிரியர் சிவஞானம், 'சரிநிகர்' ஆசிரியர் எஸ்.சிவகுமார் ஆகியோர் சிறந்த தமிழ்ப் பத்திரிகைகளுக்கான விருதுகளைப் பெறுவதை மூன்றாவது, நான்காவது படங்களில் காணலாம். (ஐ)







கிழங்கிலங்கைப் பத்திரிகையாளர் ஜி.நடேசன், மலையக மூத்த பத்திரிகையாளர் க.ப.சிவம் ஆகியோர் விருது பெறுவதை மேலே உள்ள படங்களில் காணலாம். (ஐ)

# பிரதம நீதியரசரில் நம்பிக்கை; நீதிபதிகள் சங்கம் தீர்மானம்

கொழும்பு,ஜூன்11

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா மீது தமக்கு முழு நம்பிக்கையிருப்பதாக இலங்கை மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்கம் அதன் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கூட்டத்திற்கு அன்றூ சோமவன்ச தலைமை வகித்தார்.

மகாசங்கம் மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்கம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், வேறும் பல சங்கங்கள் பிரதம நீதியரசர் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. (க)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அதிபர் கு.க[illegible] தலைமையில் நடைபெறு[illegible]

# ஈழத்தில் தமிழ் அரசு அமைந்தது கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலா?

ஈழத்து தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வின் அகலமும், ஆழமும் தோன்ற முழுமையாக ஆய்வு செய்வதில் வல்லவர்கள் என்பதைக் கடந்த முப்பது ஆண்டுகளாக நான் நன்கு அறிவேன். 1974, 1975இல் எனது ஈழத்துப் பணயத்தின் போது இதை நேரில் அறிந்து மகிழ்ந்தவன் நான். அவர்களில் பலர் அறிமுகம் எனக்கு உண்டு.

அப்பாரம்பரிய பண்பாட்டிற்கும், இயல்புக்கும் ஏற்பவே ஈழத்து இளம் ஆய்வாளர், என் இனிய நண்பர் கலாநிதி பரமு. புஷ்பரட்ணம் அவர்கள் ஆய்வில் ஈடுபடுவதிலும், கள ஆய்வுகளில் கிடைத்த சான்றாதாரங்களாகிய தரவுகளைத் தொகுத்து ஆய்வு செய்வதிலும், அதனை ஏற்ற கட்டுரைகளாக்குவதிலும், பொருத்தமான அறிஞர்கள் பங்கு கொள்ளும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தம் ஆய்வுரைகளை அளிப்பதிலும், ஆக்கபூர்வமான விவாதங்களில் கலந்து கொள்வதிலும், கட்டுரைகள்-நூல்கள் வெளியீட்டிலும் தேர்ந்த திறமையான முறையான ஆய்வு நெறியைப் பயன்படுத்திப் பங்கு கொள்வதில் முன் நிற்பவர். அவர் தஞ்சை வாசத்தின் போது உடனிருந்து நான் இவைகளைக் கவனித்துள்ளேன். பல முறை அவரை வாழ்த்தியுள்ளேன்.

ஈழத்தில் தக்க அறிவுசான்ற ஆய்வுலக ஆசான்களைப் பெற்று வளர்ந்து கொண்டிருந்த அவருக்குத் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகக் கல்வெட்டு, தொல்லியல்துறைச்சூழல் வளர்பயிருக்கு நல்ல நீரும், உரமும் இட்டது போல் ஆயிற்று. மிகச்சிறந்த தொல்லியல் துறைப் பேரறிஞர் ஆகிய முனைவர் எ.சுப்புராயலு அவர்கள், பல்துறை ஆய்வில் ஆர்வமுள்ள துறை ஆசிரியர்கள், மாணவர்கள், தஞ்சை நண்பர்கள் ஆகியோர் தொடர்பு நண்பர் புஷ்பரட்ணத்தின் ஆய்வுப் பணிகட்குப் பக்க பலமாகவும், அறிவு வேட்கைக்கு உதவும் கரங்களாகவும் திகழ்ந்தன. கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் கலாநிதி புஷ்பரட்ணம். குறிதத காலத்தில் அனைவரும் போற்றிப் பாராட்டும் வண்ணம் தமிழ்ப்பல்கலைக்கழக கல்வெட்டு-தொல்லியல் துறையில் ஆய்வு செய்து "கலாநிதி" (டாக்டர்) பட்டம் பெற்றார். நாடு-மொழி-சமுதாயம்-குடும்பம் இவைகளால் ஏற்பட்ட இன்னல்களுக்கு இடைவிடாத - தொய்வில்லாத ஆய்வு அவருக்கு மாமருந்தாகவும் - ஆறுதலாகவும் அமைந்தது எனலாம்.

பூநகரிப் பகுதியில் துணிவுடன் அஞ்சாமல் தன்னந்தனியாக புறப்பட்டு தன் கள ஆய்வால் - கண்ட முடிவுகளால் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் - வரலாற்றுப் பேராசிரியர்கள் ஆகியோரின் கவனத்தை ஈர்தது புஷ்பரட்ணம் வெளியிட்ட 'பூநகரி - தொல்பொருளாய்வு - 1993' ஒரு கலைக்களஞ்சியமாகும். 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' (2000) மிகச் சிறந்த வரலாற்று ஆய்வேடு. அவ்விரு நூல்களும் அவரது புலமைக்குச் சிறந்த எடுத்துககாட்டுக்களாகும். தொடர்ந்து இப்போது "இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்" (2001) என்னும் இந்த அரியதோர் நூலினை ஆய்வு செய்து சிறப்புடன் வெளியிடுகிறார்.




ஈழத்து நாணயங்கள் பற்றி இதுவரை ஆய்வு செய்த பெருமக்கள் ஆய்வுகள் அனைத்தையும் தன்னுள் கொணடு, தம் கள ஆய்வின் மூலமாகவும், தம் ஆய்வின் பட்டறிவு மூலமும தாம் கண்டறிந்த புதிய உண்மைகள் மூலமும் அவற்றை அலசி ஆராய்ந்து பல புதிய முடிவுகளை இந்நூலில் புஷ்பரட்ணம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஈழ, தமிழக வரலாற்றிற்கு அடித்தளமிடும் நல்ல சான்றாக அமைந்துள்ளன. பல புதிர்களைத் தீர்த்துள்ளார், பல வினாக்களுக்கு இந்நூலில் நல்ல பொருத்தமான விடைகளைக் கண்டுள்ளார். "கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஈழத்து தமிழ் அரசு அமைந்தது. அப்பொழுதிருந்துதான் அவர்கள் நாணயங்கள் வெளியிடப்பட்டன" என்ற பலருடைய கருத்துக்களை மறுத்து அவை கி.மு.2ஆம் நூற்றாண்டிலிருநதே அமைந்துள்ளன என்பதை இந்நூலில் அசைக்க முடியாத ஆதாரங்களுடன் ஏற்ற முறையில் தெளிவாக விளக்கியுள்ளார். ஈழத்தில் கிடைத்த பல நாணயங்கள் தமிழ் நாட்டிலிருந்து "கொண்டுவரப்பட்டன" என்ற பலருடைய பழங்கருத்துக்களை வன்மையாக மறுத்து அவை ஈழத்திலேயே வெளியிடப்பட்டவை என்பதை ஆய்ந்து நிறுவியுள்ளார். இக்கொள்கைக்கு இவர் காட்டும் ஆதாரங்கள் மறுக்க இயலாதவைகளாக உள்ளன.

ஈழத்து தமிழர் தம் நாணயங்கள் அவர்களது மொழி, நாடு, சமயம், கலை, அரசு, வணிகம், பொருளாதாரம், வெளிநாட்டுத் தொடர்பு, பண்பாடு ஆகியவைகளை பறைசாற்றும் முரசுகளாகத் திகழ்கின்றன என்பதை பக்கத்திற்குப் பக்கம் இந்நூலில் கண்டு மகிழலாம். தமிழக நாணயங்களில் இருந்து மட்டுமன்றி, தென்னிலங்கை நாணயங்களில் இருந்தும் ஈழத்து தமிழர் நாணயங்கள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதை நன்கு ஆய்வு செய்து நிறுவியுள்ளார். இதற்குத் தமிழக, தென்னிலங்கை நாணயங்கள், வரலாறு, இலக்கியப்புலமை, ஆய்வு நூல் தொடர்பு போன்ற அனைத்திலும் தேய்ந்த பட்டறிவு வேண்டும். அதனை நண்பர் புஷ்பரட்ணம் நன்கு பெற்றுள்ளார் என்பதை அவர் செய்யும் விவாதங்களில் நாம் காணுகிறோம்.

பலர் வெளியிட்டுள்ள பல்வேறு நாணயங்களின் உண்மைத் தன்மையை நன்கு விளக்கியுள்ளார். பல ஆய்வாளர் கருத்துக்களுக்கும், வாசகங்களுக்கும் சரியான வாசகங்களைக் கொடுப்பதில் நண்பர் புஷ்பரட்ணம் வல்லமை பெற்றிருப்பதைப் பல இடங்களில் காணமுடிகிறது.

**நூல்:- இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்.**
**நூலாசிரியர்: கலாநிதி பரமு. புஷ்பரட்ணம்.**

## நூல்வரிசை

தென்-வட இலங்கையில் தமிழரசர்கள், அரசுகள், அவர்தம் ஆட்சி, சைவம், வைஷ்ணவ சமயம், கடவுளரின் பல்வேறு உருவங்கள், கடவுளரின் ஆயுதங்கள், தமிழ் எழுத்துப் பொறிப்பு, சங்க இலக்கியங்களோடு தொடர்புடைய சொற்கள், தமிழ் எழுத்து முறை, தமிழுக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த எழுத்துக்கள் ஆகியவை நாணயங்களில் காணப்படுகின்றன. அவை இன்னும் தமிழ் வரலாற்றில் இடம்பெறவில்லை. இடம் பெறவேண்டியது அவசியம். அவற்றை எடுத்துக்காட்டி நண்பர் புஷ்பரட்ணம் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார்.

பேராசிரியர், கலாநிதி, புலவர்
**செ.இராசு எம்.ஏ.**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

ஏதோ நாணயங்கள் பற்றிய ஆய்வாக மட்டும் இந்நூலை எடுத்துக் கொள்ளக்கூடாது. ஈழநாட்டின் தொன்மை வரலாற்றையும், தொடர் வரலாற்றையும் எடுத்துக் கூறும் கருவூலமாக இந்நூலைக் கொள்ளவேண்டும். நாணயவியல் ஆய்வில் மிகச் சீரிய இடத்தை புஷ்பரட்ணம் அவர்களுக்கு இந்நூல் பெற்றுத்தரும். தாம் பிறந்த மண்ணிற்கு, மண்ணின் மைந்தர்களான மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. மற்றவர்களும் இதனை ஓரளவாவது பின்பற்றவேண்டும்.

ஈழமும், தமிழ் கூறும் நல்லுலகமும் கலாநிதி பரமு. புஷ்பரட்ணம் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. ✳

# எழுவைதீவில் சைக்கிள்களுக்கு உரிமத் தகடுகள்

ஊர்காவற்றுறை,ஜூன்11

எழுவைதீவு பகுதியில் சைக்கிள்கள் மற்றும் மாட்டு வண்டில்களுக்கு இவ்வாண்டுக்கான உரிமத் தகடுகள் பிரதேச சபை எழுவைதீவு உப அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை இவற்றுக்கான உரிமத் தடுகளை பெற்றுக்கொள்ளதவர்கள் கூடிய விரைவில் இவற்றை பெற்றுக்கொள்ளுமாறு எழுவைதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

வீதிகளில் சைக்கிள்கள் பரிசோதனை செய்யப்படவுள்ளதால், சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டே விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு சைக்கிள் பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-16)

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,ஜூன்11

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் நினைவுப் பேருரை இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராசா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-4)

# மூவின மக்களும் இணைந்து காணும் தீர்வே நிலைக்கும்!

இலங்கையில் நிலவும் உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் நோர்வே உட்பட எந்த ஒரு நாடும் தலையிடத் தேவையில்லை. அந்த நாடுகளால் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் கொண்டு வரவும் முடியாது.

இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து காணும் தீர்வே நிரந்தரமான - நிலையான - தீர்வாக அமைய முடியும்.

மக்கள் விடுதலை முன்னணியின அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடுவெலவில் உள்ள அவரது பொதுமக்கள் தொடர்பு நிலையத்தில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு அவர் அளித்த விசேட பேட்டியிலேயே இப்படிக் கூறினார்.

நீண்ட காலம் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட காரணத்தால் ஆங்கில மொழியையோ, தமிழ் மொழியையோ கற்க முடியாத துர்பாக்கிய நிலையில் தாம் இருப்பதாக பேட்டியின் ஆரம்பத்தில் வருத்தம் தெரிவித்த 31 வயது நிரம்பிய அவர் -

தம்போன்று ஏராளமான இளைஞர்கள் தீவிரப் போக்கைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய

## நோர்வே எதையும் சாதிக்கப்போவதில்லை

போதும் சகோதர மொழி ஒன்றைக் கற்க முடியாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

கேட்ட கேள்விகளுக்கு சிரித்தபடி வெட்டொன்று துண்டு இரண்டாக- ஆணித்தரமாக - அவர் பதில் அளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு:-

☆ *கேள்வி:-* இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமா அல்லது யுத்தம் மூலமா தீர்வு காணவேண்டும் என்று தங்கள் கட்சி விரும்புகின்றது?

☆ *பதில்:-* நாட்டில் இன்று உருவாகியுள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு பேச்சு மூலமோ, யுத்தம் மூலமோ தீர்வு காணமுடியாது. இந்நாட்டில் ஆட்சிக்கு வரும் [illegible] தமது ஆட்சியை ஒட்டிக்கொள்வதற்காக தமிழ் மக்களின் பிரச்சினையை



ஒரு துரும்பாகப் பாவிக்கின்றன.

இன்று ஆட்சியில் இருக்கும் அரசும் அதையே செய்கின்றது. யுத்தம் செய்வதாகப் பிரசாரம் செய்து கொண்டே கடந்த ஆட்சிக் காலத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கடத்தி விட்டது. இரண்டாவது தடவையாக தற்சமயம் ஆட்சி ஏறியுள்ள அந்த அரசு விடுதலைப் புலிகளுடன் பேசப் போகிறோம் என்று கூறி ஏமாற்று நாடகம் ஒன்றை அரங்கேற்றிக் தொண்டிருக்கின்றது.

விடுதலைப்புலிகளை அழித்து அவர்களின் செயல்களுக்கு முடிவு கட்டப் போகிறோம் என்று கூறி கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு எதிரான யுத்தத்தை மேற்கொண்டது சந்திரிகாவின் அரசு. ஆனால் அதை ஒழுங்காகச் செய்யவில்லை.

மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறியதும் விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசப் போகிறோம் என்று தற்போது கூறிவருகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை அழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து வீணான உயிர், உடைமை இழப்புக்களைத் தவிர்க்க முற்படாமல் பேச்சு, யுத்தம் என்ற இருவார்த்தைகளையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி மாறி மாறிப் பயன்படுத்தி ஆட்சிக் காலத்தைக் கடத்தவே இன்றைய அரசு முனைகின்றது.

மாற்று அரசு ஒன்று அமைந்தால் கூட தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படமாட்டாது.

☆ *கேள்வி:-* தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண எவ்வகையான தீர்வுத் திட்டத்தை தங்கள் கட்சி முன்வைக்க விரும்புகின்றது?

☆ *பதில்:-* இந்த நாட்டில் பிரிவினை என்ற கோரிக்கை எழக் கூடாது. நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம மக்கள் ஒன்றுபட்டுக் காணும் தீர்வே நிரந்தரமானதாக அமைய முடியும்.

ஒரே நாடு என்ற கொள்கையுடன் சகல இனமக்களும் சகோதரர்கள் போன்று ஒன்றாக வாழக்கூடிய வகையில் எட்டப்படும் தீர்வே நிரந்தரத் தீர்வாக அமைய முடியும்.

அத்தகைய தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

அத்தகைய தீர்வும் அவரின் தலையீடும் இன்றி உள்நாட்டிலேயே ஏற்பட வேண்டும். அந்தத் தீர்வு சமஷ்டி முறையிலான தீர்வாக அமைந்தால், சகல இன மக்களும் சகோதரர்கள் போன்று நட்புடன் வாழ வழி ஏற்படும்.

சகல இனங்களும் இணங்கக் கூடிய ஒரு தலைமை உருவாக வேண்டும். அந்தத் தலைமை மூலமே தீர்வு காணமுடியும்.

☆ *கேள்வி:-* விடுதலைப்புலிகளுடன் அரசு நேரடியாகப் பேச எடுக்கப்படும் முயற்சி குறித்து...?

☆ *பதில்:-* விடுதலைப் புலிகளுடன் அரசு பேச வேண்டிய கட்டாயம் ஏற்படுமானால், புலிகள் தமது ஈழக் கோரிக்கைகளைக் கைவிடுவதாகப் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். அ[illegible]க் கோரிக்கையை அந்த [illegible]பு வலுவாகப் பற்றி நிற்கும் வ[illegible] அத்துடன் பேசக்கூடாது.

ஈழக் கோரிக்கை வலுப்பெற்று நாடு பிரியும் நிலை ஏற்பட்டால் நாட்டில் குழப்பங்கள் உருவாகும். அத்தகைய நிலை உருவாக இடம் அளிக்கப்படக்கூடாது.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். 'யுத்தம் தொடரக் கூடாது, வன்செயல்கள் இடம் பெறக்கூடாது' என்பதற்காக அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து வருகின்றோம்.

**விமல் வீரவன்ஸ 'உதயனு'க்கு சிறப்புப் பேட்டி**

நாடாளுமன்றத்தில் ஓர் அங்கத்துவம் இருந்தபோதும் சரி தற்சமயம் பத்து அங்கத்துவம் கிடைத்தபோதும் சரி அவசர காலச் சட்டத்தை எதிர்த்து எமது கட்சி வாக்களித்து வருகின்றது. யுத்தத்தை எதிர்த்தே இந்த நிலைப்பாட்டை நாம் எடுத்துள்ளோம்.

☆ *கேள்வி:-* இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் தலையீட்டைத் தங்கள் கட்சி எதிர்ப்பதற்குக் காரணம என்ன?

☆ *பதில்-* நோர்வே மட்டும் அல்ல எந்த நாடும் இலங்கை விவகாரத்தில தலையிடுவதை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம். அந்த நாடுகள் தமது நலன்களுக்கு லாபம் தேடும் நோக்கத்துடனேயே எமது நாட்டு விவகாரத்தில் செயற்படுகின்றன.

எமது நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற விருப்பம் எள்ளளவும் அவற்றுக்கு கிடையாது.

நோர்வே அரசின் தூதுவராக இந்த விடயத்தில் ஈடுபட்டிருக்கும் சொல்ஹெய்ம் யார்? இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னின்று செயற்பட்டவரின் மகன்தான் இவர்.

**பேட்டிகண்டவர்: மாவை குகன்**

இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினையை அவர் தீர்த்து வைத்ததாக சர்வதேச சமூகத்துக்கு அறிவிக்கப் பட்டது. ஆனால் அந்த நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டுவிட்டதா? அங்கு தொடர்ந்து இரத்தம் சிந்தப் பட்டு, போராட்டம் தொடர்கிறதே..?

அவரின் மகனான சொல்ஹெய்ம் இலங்கை விவகாரத்தில் தீர்வைக் கண்டாலும் அது நீடிக்குமா என்பது கேள்விக்குறியே.

நோர்வேயின் பிரசன்னத்தை அடியோடு நாம் நிராகரிக்கின்றோம். இதற்காகவே அந்த நாட்டுத் தூதுவர் எமக்கு விடுத்த அழைப்பைக் கூட நிராகரித்தோம்.

### வெளிநாடுகளிடம் அரசு தஞ்சம்

☆ *கேள்வி:-* இன்றைய ஆட்சி பற்றி...?

☆ *பதில்:-* எமது நாட்டை இன்று நிர்வகிப்பது உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஆகும்.

பெயரளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி செலுத்திய போதும், நாட்டை நிர்வகிப்பது அந்த சர்வதேச அமைப்புகள்தான். அந்த அமைப்புக்களிடம் நாடு அடகு வைக்கப்பட்டுவிட்டது.

நாட்டில் எது நடக்க வேண்டும்? எப்போது தேர்தல் நடக்க வேண்டும் போன்ற விடயங்களை எல்லாம் முடிவு செய்யும் பொறுப்பு அந்த அமைப்புக்களிடம் ஒப்படைத்துவிட்டது.

இந்த அமைப்புக்களிடம் இருந்து நாடு மீட்கப்பட வேண்டும். அப்போது தான் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

அத்துடன் எந்தவொரு தலையீடும் இன்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் இணைந்து எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். இதற்காக நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

★

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 20 - 06 - 1936



உதிர்வு 12 - 05 - 2001

அமரர்

### வேலுப்பிள்ளை முருகேசு

உய்யும் வழி இதுவென்று மெய் நெறி காட்டி
பெய்யும் மழையாய் அன்பு பொழிந்து
எம்மை அரவணைத்து வளர்த்த
ஆருயிர்த் தெய்வம் அப்பாவே!
திங்கள் ஒன்று ஆன போதும் ஆறவில்லை
எம் துயர்! அஞ்சலிகள் செய்கின்றோம்
ஆன்மா நலம் பெறவே!

எமது தந்தையின் மறைவின் போது அனைத்து உதவிகளையும் நல்கிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (11-06-2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*"குற்றாலம்",*
*வரணி வடக்கு,*
*வரணி.*

(88852)

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## இலங்கை - இந்திய மீனவருக்கு விரைவில் பொது மன்னிப்பு

### அமைச்சர்களின் சந்திப்பில் இணக்கம்

கொழும்பு,ஜூன்11

இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள 51 இந்திய மீனவர்களையும் இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 63 இலங்கை மீனவர்களையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதற்கு இந்திய கடற்றொழில் அமைச்சர் நிதிஷ் குமார் மற்றும் இலங்கை கடற்றொழில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையிலான. சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுவொன்றும் விரைவில் அமைக்கப்படுமென அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை அரசின் ஆலோசனைகள் அடங்கிய மகஜரொன்று இந்தியக் கடற்றொழில் அமைச்சர் நிதிஷ்குமாரிடம் கையளிக்கப்படும். இரு நாடுகளின் பிரதிநிதிகளும் அங்கத்துவம் வகிக்கும் கண்காணிப்புக் குழுவின் அங்குரார்ப்பண வைபவம் கொழும்பில் நடைபெறும். அதன்போது இந்தியக் கடற்றொழில் அமைச்சர் நிதிஷ்குமார் இலங்கைக்கு விஜயம் செய்வார். அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் கண்காணிப்புக்குழு இரு மாதங்களுக்கு ஒருமுறை புதுடில்லியிலும் இலங்கையிலும் மாறி மாறிக் கூடுவதுடன் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயுமென அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

(ம)

### குடிதண்ணீர் இன்றி பக்தர்கள் சிரமம்

ஊர்காவற்றுறை,ஜூன்11

ஊர்காவற்றுறை, கரம்பொன் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும் நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயத்துக்கு பொங்குவதற்காக வரும் அடியார்கள் ஆலயச் சுற்றாடலில் குடிதண்ணீர் வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கவனிப்பார் அற்ற நிலையில் இருக்கும் இவ்வாலாயத்தில் ஒவ்வொருவருடமும் வைகாசி மாத்தின் சனிக்கிழமைகளில் அதிகமான பக்தர்கள் வந்து பொங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது வழமையாகும். (ம-16)

### நூல் வெளியீட்டு விழா

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரிப் பீடாதிபதி செ.அழகரத்தினம் எழுதிய 'கல்வியும் இலக்கியமும்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர். விசாகலிங்கம் கலந்துகொள்வார்.

### தோட்டங்களில் விளைபொருள்கள் திருட்டு

புன்னாலைக்கட்டுவன், ஈவினை பிரதேசங்களில் நீண்டகாலத்திற்குப் பின் விவசாய விளைநிலங்களில் விளைபொருள்கள் திருடர்களால் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருகின்றன. வெங்காயம், வாழைக் குலை, மரவள்ளிக்கிழங்கு போன்ற விவசாய விளைபொருள்கள் திருடப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.(ஜ-133)

---

**சாவகச்சேரி, சங்கத்தானை அருள்மிகு கந்தசுவாமி கோயில்**

## வருடாந்த மஹோற்சவம்

முருகன் அடியார்களே!

நிகழும் விஷு வருடம் வைகாசி மாதம் 29 ஆம் நாள் நாளை (12-06-2001) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆனி மாதம் 6 ஆம் நாள் (20-06-2001) புதன்கிழமை தேர் உற்சவத்துடனும், ஆனி மாதம் 7 ஆம் நாள் (21-06-2001) வியாழக்கிழமை தீர்த்தோற்சவத்துடனும் நிறைவெய்த வேண்டிய எம்பெருமானது வருடாந்த மஹோற்சவம் தற்போதைய சூழ்நிலையில் காலத்தின் கோலத்தால் நடைபெற முடியாமல் இருப்பது அடியார்கள் அறிந்ததே. எனவே இக்காலப் பகுதியில் மெய்யடியார்கள் விரதமனுட்டித்தும், பிரார்த்தனையில் ஈடுபட்டும் தென்மராட்சி மக்கள் அமைதியும், சுபீட்சமும் பெற்று மீண்டும் சொந்த மண் திரும்ப, கந்தனருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

(88850) - ஆலய பரிபாலன சபை.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி

## விண்ணப்பம் கோரல்

2001ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக இருக்கும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவு பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். **விண்ணப்ப முடிவு திகதி :- 22.06.2001.**

கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி,
*இலக்கம் 14, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- அதிபர்.

(சி/17058)


## 90 ஆம் நாள் நினைவலைகள்



செல்வி
**திருநாவுக்கரசு சுஜிகலா**
*(முதலாம் ஆண்டு மாணவி(கல்ல)பட்டப்படிப்புகள் கல்லூரி)*

மலர்வு 08-12-1978 உதிர்வு 14-03-2001

எங்கள் அன்பின் திருவுருவே!
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளி விளக்கே! எம்மை எல்லாம்
ஆறாத்துயரில் விட்டு விட்டு, மீளாத்துயில் கொண்ட
அன்புச் செல்வமே! தொண்ணூறு நாள்கள்
அல்ல எத்தனை நாள்கள் தான் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாதம்மா!

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணன்மார் மற்றும்
நண்பர்கள், உறவினர்கள்.

*நாச்சிமார் கோயில் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (88874)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1934 - 01 - 04 | 2001 - 05 - 12 |

அமரர்
**A.R.வேலுப்பிள்ளை சோமசுந்தரம்**
(A.R.V.S.)

அருமைத் தந்தையே! உங்கள் கடமை
முடிந்ததென்றோ சென்றீர்கள்?
நாம் ஐவரும் தினமும் உங்கள்
அரவணைப்பின்றித் தவிக்கின்றோம்!
என் அருமைத் தெய்வமே ஐயா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவரின் (12-05-2001) மறைந்த செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டு அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (11-06-2001) திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொன்னாவளை,*
*களபூமி,*
*காரைநகர்.* (88869)

மனைவி,
பிள்ளைகள், மருமகன்.

## ஐ.தே.க. உறுப்பினர் கருத்து

கொழும்பு,ஜூன்11

சமாதானப் பேச்சுக்கான தகுந்த சூழல் ஏற்பட்ட பின்னரே விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட எம்.பியான டிரோன் பெர்னாண்டோ.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம். அதற்கான ஒழுங்குகளை அரசாங்கமே செய்யவேண்டும்.

பேச்சுவார்த்தை மேசைக்கு வர தம்மீதான தடையை நீக்குமாறு புலிகள கோரிவருகின்றனர். ஆனால் புலிகள் மீதான தடையை ஒரேயடியாக நீக்குமாறு நாம் கோரமாட்டோம். தடையை நீக்குவதற்கான சூழ்நிலையை முதலில் ஏற்படுத்த வேண்டும்.

தமிழீழக் கோரிக்கையை விட்டு புலிகள் மாற்று யோசனையை முன்வைபார்களானால் அதனையும் தடை நீக்கம் தொடர்பில் கவனத்தில் கொள்ளலாம். புலிகள் மீதான தடை சமாதான முயற்சிக்கு தடையாக இருக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்11

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில் உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

தினமும், மாலை 6மணி முதல் முற்றோதல் இடம்பெறும். தேவார விற்பனனர்கள், திருமுறை இசைவல்லார்கள் இதில் கலந்து சிறப்பித்து வருகின்றனர். (ஐ-7)

## ஆஸ்பத்திரிக்கு குளிரூட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண்சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு இரு குளிரூட்டிகளும் இரண்டு குளிர்சாதனப் பெட்டிகளும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் நோயாளர் சேவைக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வெளிநாடு ஒன்றினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6)

## புதிய சம்பளத்திட்டம் அமுலுக்கு

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச சங்கம் பணியாளர்களுக்கான மீளாய்வு செய்யப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

புதிய சம்பளக் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அமுலுக்கு வந்திருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

புதிய சம்பளக் கொடுப்பனவு பணியாள்களுக்கு வழங்கப்பட்டு வருவதை அடுத்து சங்கப் பணியாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த நானூறு ரூபா இடர்காலக் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-17)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் கந்தசாமி நவநேசன்**
*(புகழ் பூத்த கணித ஆசிரியர்)*

அன்று சைவப் பிரகாசத் தேரின்
அச்சாணியானாய்! அனைவரும் கதற
இன்று சிவப்பிரகாசம் புகுந்தாய்!
எப்படி ஆறுவோம் எம் நவநேசா?

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கும் உறவினர்களுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

(88882)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
*யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.*

*வேலணை.*

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் க.லம்போதரன்**
*(ஓய்வு பெற்ற அரச கணக்காளர்)*

தோற்றம் 08-11-1931 மறைவு 21-05-1992

திதி: 11-06-2001

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கு
வழிகாட்டியது அன்று
எம் நெஞ்சத்துள் தெய்வமாய் இருந்து
வழிகாட்ட வேண்டும் இன்று
என விநாயகரையும் வீரபத்திரரையும் பிரார்த்திக்கும்
குடும்பம்

*126/4, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*மீசாலை.* (88656)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷூ வருஷம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் இன்று (11-06-2001) திங்கட்கிழமை காலை 10.12 மணிவரையிலான சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சுரேஸ்குமார்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுதர்சினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*✻ மணமகன் இல்லத்தில் கொண்டாட்டம் 3 நாள்கள் நடைபெறும்.✻*

*தங்கள் நல்வரவை நாடும்*

**திரு.திருமதி செல்வராசா**
*மாதா கோயிலடி,*
*சூராவத்தை, சுன்னாகம்.*

(இரு வீட்டார் அழைப்பு)

**திரு.திருமதி கிருஸ்ணபிள்ளை**
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

(88713)

# தொல்புரம் - வழக்கம்பரை

# அருள்மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான

## அதிசுந்தர பஞ்சதள இராஜகோபுர நூதன பிரதிஷ்டா சகித நவகுண்ட பக்ஷ

# மகா கும்பாபிஷேகப் பெருவிழாச் சிறப்பிதழ்

## 11~06~2001

## ஆதீன முதல்வரின் அருளாசி

அம்பிகை அடியார்களே!

தொல்புரம் - வழக்கம்பரைப்பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முத்துமாரி அம்பாளுக்கு பஞ்ச தளங்களைக் கொண்ட இராஜ கோபுரம் அமைத்து இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டும் உலகத்திற்குத் தாயாகிய அன்னை முத்துமாரி அம்பிகையாக எழுந்தருளி இருக்கின்றார். மாரி என்றால் குளிர்ச்சி. சூட்டினால் உண்டாகும் உடல் நோயையும் பிறவியினால் ஏற்படும் நோயையும் நீக்குபவளாக விளங்குகின்றாள். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பர். ஆலய வழிபாடு செய்வதன் மூலமாக மனிதன் மனித நேயத்தோடு வாழ வழி வகுக்கப்படுகின்றது. ஆலயத்தில் நடைபெறும் விழாக்களும் பூஜைகளும் மனித வாழ்வை மேம்படச் செய்கின்றன. இந்நிலையில் விளங்கும் ஆலயம் நிறைவாக விளங்குவதற்கு ஆலயத்திற்கு கூறப்பட்டுள்ள அனைத்து அம்சங்களில் இராஜகோபுரம் இன்றியமையாதது. இவ் இராஜகோபுரம் இங்கு அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுவது எல்லா மக்களுக்கும் புண்ணியப் பேறாகும். கோபுரதரிசனம் கோடி புண்ணியம். இதனைத் தரிசித்து மக்கள் அனைவரும் நல்லருள் பெற இறைவனை வேண்டுகின்றோம். இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் சிவாச்சாரியர்களுக்கும் ஆலயப் பரிபாலன சபையினருக்கும் வழக்கம்பரை வாழ் மக்களுக்கும் அம்பிகையின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய ஸ்வாமிகள்**

## ஆலயக் குருக்களின் ஆசியுரை

யாழ்.குடாநாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தொல்புரம் வழக்கம்பரையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்மிகு முத்து மாரி அம்பாளின் திருவருளைப் பெற்றவர்களும் அத்திருவருளை அனுபவிக் கின்ற நாமும் நன்கு அறிவோம்.

வரலாற்றுப் பெருமைமிக்கதும் வேண்டியதை அள்ளிச் சொரிபவளும் நோய்களைத் தீர்ப்பவளும் வேண்டியதை வாரி வழங்குபவளுமாகிய அம் மாளாச்சி மாரியாகப் பொழிந்து மகாமாரியாக அருள்பாலிக்கும் ஆச்சிக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

அம்பாள் அடியார்கள் வாரி வழங்கிய சகல உதவிகளால் பஞ்சதள இராஜகோபுரம் அமையப் பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

1950அம் ஆண்டும் 1985அம் ஆண்டும் கும்பாபிஷேகம் நடை பெற்றது. 2001இல் நடைபெறும் இம் மகா கும்பாபிஷேகம் இராஜகோபுரத்து டன் நடைபெறுவது ஆச்சியின் திருவருளே! இக்கைங்கரியம் நடைபெறும் இவ்வேளையில் சகல ஜீவராசிகளும், மக்களும் சுபீட்சமாகவும் சுதந்திரமா கவும் சமாதானமாகவும் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுய்யும் வண் ணம் வாழ எனது அருள் ஆசிகளைக் கூறி அமைவோமாக.

ஓம் சாந்தி

தொண்டர் தம் பணி சொல்லவும் வேண்டுமோ.

**சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள்**
*தேவஸ்தானகுரு*

## தொண்டர் சபையின் வாழ்த்துரை

எங்கள் குலதெய்வமாகிய ஆயிரம் கண்ணுடைய தேவியின் கடந்த கும்பாபிஷேகத்திற்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை கோபுர, மணிக்கூட்டு கோபுர தரிசனங்களுடன் கும்பாபிஷேகம் செய்யும் போது பதினொரு ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். எங்களை செவ்வனே வழிநடத்திய முத்துமாரி அம்பாளின் கருணை பெருங் கருணை, இத்தேவஸ்தானத்தின் பரிபாலனசபையினருடன் இணைந்து எம்மாலான சேவைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்ற நன்மொழிக்கு அமைவாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் சைவமக்கள். இதனாலேயே நாட்டில் ஏற்பட்டிருக்கும் அனர்த்தங்கள் யாவற்றிற்கும் முகம் கொடுத்து வாழக் கூடியதாகவுள்ளது.

எங்கள் அம்பாளின் அற்புதங்கள் ஏராளம், ஏராளம். அவற்றிலே நம்பிக்கை கொண்டே இக்கோவிலைச் சுற்றிவாழும் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல நேர்த்திகளை நிறைவேற்றி அம்பாளின் அருட்காட்சம் பெற்று வாழுகின்றனர்.

அம்பாளுக்கு ஒரு திருக்கோபுரம் அமைத்து பார்வையிட வேண்டுமென நாம் எல்லோரும் அங்கலாய்த்து, அம்முயற்சியில் இறங்கினோம். "நாம் நினைக்கின்றோம். அவள் செய்விக்கின்றாள்" என்றவறு சகல காரியங்களும் எவ்வித தடையுமின்றி நடைபெற்று முடிந்திருக்கின்றன.

இந்த இக்கட்டான காலத்திலும் இப்பெரும் கைங்கரியத்தை நிறைவேற்ற முடிந்ததேயென்ற மனநிறைவுடன், இன்னும் பல வேலைத்திட்டங்கள் செய்யவேண்டியுள்ளன. அவற்றையும் எல்லாம் வல்ல தேவியின் பார்வையால் நிறைவேற்ற முடியுமென்ற நம்பிக்கையுடன் இப்புண்ணிய காரியங்களில் ஈடுபட்ட அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.

**தி.உதயசூரியன்** — *செயலாளர்.*
**மா.சிவரத்தினம்** — *தலைவர்.*

(88822)

## அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீ முத்துமாரி அம்மன்



எமது தேவஸ்தான வரலாறு காலத்தால் முந்தியது. எவ்வா றாயினும் 1830அம் ஆண்டினை ஓர் அளவிற்கு அடி ஆண்டா கக் கருத வேண்டியுள்ளது.

கோயில் [illegible] உள்ள இடம் பலவின மரங்கள் நிறைந்த ஒரு காடாக இருந்திருக்கின்றது. இவ்விடத்தில் கொளுத்தும் வெயிலில் இடையன் ஒருவன் தனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான் என்றும் அந்நேரத்தில் ஒரு கிழவி வந்து மகனே தாகமாக இருக்கிறது. எனக்கு நீர் கொஞ்சம் எடுத்துத் தருவாயா என்று கேட்டாளாம். இடையனும் அவ்வாறு அயல் கிணற்றில் பட்டை மூலம் தண்ணீர் எடுத்து வந்து தாகம் தீர கிழவிக்குக் கொடுத்ததாகவும், தாகம் தீர்ந்த பின் தலை கடிக்கிறது கொஞ்சம் பேன் பார்த்துவிடுவாயா? என்று கிழவி கேட்டதாகவும் அதற்கு இடையன் பேன் பார்ப்பதற்காக தலை மீது கையைக் கொண்டு போன போது தலை முழுவதும் கண்கள் இருப்பது போல் கண்டு ஆச்சரியம் அடைந்து தன் நண்பர்களை அழைத்து வந்து பார்த்தபோது கிழவியைக் காணவில்லை என்றும் கூறுவர். ஆனால் அன்று இரவு குறித்த இடையனின் கனவில் தோன்றி தான்தான் இன்று உன்மூலம் நீர் எடுத்துக் குடித்ததாகவும், நீதான் பேன் பார்த்தாய் என்றும், நான் இங்கு தங்க உள்ளதால் எனக்கு ஒரு கொட்டில் அமைத்துத் தா என்றும் கூறப்பட்டது. இதன் பின்னர் அந்த இடையனால் ஒரு கோயில் அமைக்கப்பட்டு அங்கு அம்மன் உருவம் வைக்கப்பட்டு எல்லோரும் வழிபடத் தொடங்கினர் என்றும் கூறுவர்.

பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சரவணமுத்து முதலியார் அவர்கள் யாழ். மேல் பற்றுக்கு பஞ்சாய நீதிபதியாக இருந்தார். அக்காலத்தில் ஏதோ ஒருவகை நோய் உக்கிரத்தோடு பரவி மக்களையும், ஒல்லாந்த போர் வீரர்களையும் தாக்கிப் பலரைப் பலியெடுத்தது என்றும் கூறுவர். அப்பொழுது அம்மனுக்கு கோயில் எடுத்தால் பரவிய கொடிய நோய் நாட்டைவிட்டு அகலும் என்று ஒல்லாந்தர் ஆட்சியில் உயர் பதவி வகித்த சரவணமுத்து முதலியார் அவர்கள் சிறியதாக இருந்த கோயிலைப் பெரும் கோயிலாகக் கட்டினார்.

வழக்கம்பரை என்னும் தலம் தொல்புரம், சுழிபுரம், பண்ணாகம், சித்தங்கேணி என்னும் நான்கு கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. பல அடியார்களின் உதவியினால் பல மண்டபங்கள் கட்டப்பட்டதுடன், பெரும் தொகையான காணிகளும் பாவனைக்காக பொதுமக்களால் கொடுக்கப்பட்டன. கிணறுகள் மடங்கள் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டன. காலம் செல்லச்செல்ல கோயிலும் விரிவுபடுத்தப்பட்டு மக்கள் அலைஅலையாக அம்மனைத் தொழுவதற்காகக் கூடத் தொடங்கினர்.

காலப்போக்கில் அதன் மகிமை பெருகியதோடு சகல கிராமங்களிலும் வழக்கம்பரை அம்மன் தேவஸ்தானம் என்ற பெயரும் பிரபல்யமாகியது. தனித்துவமான முகாமையாளர், முதலாளி என்ற நிர்வாக அதிகாரம் காலபோக்கில் மாறத் தொடங்கி சம்பந்தப்பட்ட அனைவரும் இறுதியில் ஒன்று கூடி 1985.08.18 ஆம் திகதி பரிபாலன சபை உருவாக்கப்பட்டது. இன்று இப்பரிபாலன சபையே அதிஉயர் நிர்வாக அலகாகத் திகழ்கின்றது.

கோயில் உட்பிரகாரம் முழுவதாகத் திருத்தி அமைக்கப்பட்டு அதோடு தொடர்பான ஆலயத் திருத்தங்கள் யாவும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் கடந்த 06.04.1988இல் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் நின்று விடாது அன்றிலிருந்து பல செயற்றிட்டங்களை உருவாக்கி இராஜகோபுரம், வில் விமான முகப்பு, தெப்பக்குளம், சித்திரத் தேர் என்பன அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டனர். அதற்கு அமைய தற்போது பெரும் பொருள் செலவில் பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு அத்துடன் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தினம் கும்பாபிஷேகம் நிகழ அம்மன் அருள்பாலித்துள்ளாள். பரிபாலன சபை இத்துடன் தனது பணியை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. வில் விமான முகப்பினை அமைப்பதே அதன் தென் பெரும் பணியாக வரும் காலத்தில் கருதப்படும். இந்த எண்ணத்தை நிறைவேற்ற என்றும் எம் தேவி எமக்கு வல்லமை வழங்கிக்கொண்டிரு[illegible]ளாக.

## கும்பாபிஷேகப் பிரதம குருவின் நல்லாசி

தொல்புரம் கிராமத்தில் வழக்கம்பரைப் பதியில் எழுந்தருளி இருந்து அருள் புரியும் முத்துமாரி அம்மனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபி ஷேகத்தைக் காண்பது, செய்விப்பது மஹா புண்ணியப் பேறாகும். உலகத்திற்குத் தாயாக இருக்கும் அன்னை முத்துமாரி, அம்பாளாக எழுந்தருளி இருந்து அருள் செய்வது இவ்வூர் மக்கள் செய்த புண்ணியப்பயனாகும்.

"நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
மஹாமாரியை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்"

ஆகவே மாரித்தாயை தஞ்சம் புகுந்து வாழ்வில் மேன்மை அடைய வேண்டும். தொல்புரம் வழக்கம்பரை வாழ்பெருமக்கள் அம்பாளுக்கு அழகிய பஞ்சதள இராஜ கோபுரம் அமைத்து பெரும் சாந்தி வழிபாடு கிடைக்கப் பெற்றது ஒரு வரப்பிரசாதமாகும். எனவே, நின்றும் இருந்தும் கிடந்தும் அன்னை முத்துமாரியை வழிபட்டு உலக மக்கள் அனைவருக்கும் பரிபூரண திருவருள் கிடைக்க அன்புத் தாய் முத்துமாரி அம்பாள் பாதக் கமலங்களை வணங்க ஆசி கூறுகின்றேன்.

*'சிவாகம கிரியா தத்துவநிதி'*
**சிவஸ்ரீ ச.மு.பாஸ்கர (ரவி)க்குருக்கள்**

## பரிபாலன சபை நிர்வாகிகளின் வாழ்த்துரை

எல்லாம் வல்ல எம் தேவிக்கு இன்று கும்பாபிஷேக பெருவிழா, அதி சுந்தர பஞ்சதள இராஜகோபுரம் அன்று எம்மனதில் கற்பனையாக இருந்தது. இன்று எம் கண் முன்னே நிஜமாகக் காட்சி தருகின்றது. இக்கும்பாபிஷேகக் கிரியை இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக் கொணர்ந்து, ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது. இன்றைய தினம் எம் ஊருக்கு மட்டுமல்ல, சூழவுள்ள ஊர்களி லும் உள்ள அத்தனைபேருக்கும் ஆன்மீக ஈடேற்றத்தைக் கொடுக்கும் நன்னாள். கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டு, அவசியம் செய்ய வேண்டப்படுவதே மண்ட லாபிஷேகமாகும். இம்மண்டலாபிஷேகம் எமது திருத்து வதில் 45 நாள்கள் நடைபெறும். இந்த 45 நாள்களிலும் பங்கு கொண்டு அம்மனுக்குப் பூசை செய்வோர் பெரும் பேறு பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

நாம் நிர்வாக சபையில் அங்கம் வகிக்கும் காலத்தில் இவ்வாறான கும்பாபிஷேகம் நடைபெறுவதிலும், அதனை நாம் கண்குளிரக் கண்டு மகிழ்வதும் நாம் செய்த பேறா கும்.

எல்லாம்வல்ல எம் தேவி என்றும் எமக்கு நல்லாசி களை வழங்கிக் கொண்டு இருப்பதுடன், அடுத்து நாம் திட்டமிட்டிருக்கும் எம் தேவியின் மீதித் திருப்பணி களை நிறைவேற்றிட வழி அமைத்துத் தருவாராகுக!

**சி.கைலைநாதன்** *(தலைவர்)*
**து.ரகு** *(செயலாளர்)*

*தேவஸ்தான பரிபாலன சபை.*

*சிறப்பிதழ் வெளியீடு:*
**தொல்புரம் வழங்கம்பரை**
**முத்துமாரி அம்மன்**
**தேவஸ்தான தொண்டர் சபை**

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுன்11

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 9ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சாவகச்சேரி**

(182366ஏ) (182366பி)

**கரவெட்டி**

(177966ஏ) (183635ஏ) (183635பி)
(183635சி) (183635டி) (188205ஏ)
(188205பி) (188205சி) (189919ஏ)
(189919பி) (189919சி) (189919டி)
(189958ஏ) (190242ஏ) (190242பி)
(190242சி) (190242டி) (190242ஈ)
(190242எவ்) (190242ஜி) (192722ஏ)
(192746ஏ) (192749ஏ) (192753ஏ)
(192755ஏ) (192755பி) (192756ஏ)
(193837ஏ) (193851ஏ) (193851பி)
(193851சி) (193851டி) (193856ஏ)
(193881ஏ) (193881பி) (193881சி)
(193881டி) (193881ஈ) (193885ஏ)
(193894ஏ) (193894பி) (193894சி)
(193926ஏ) (193962ஏ) (193962பி)
(193962சி) (193985ஏ) (194024ஏ)
(194041ஏ) (194066ஏ) (194121ஏ)
(194126ஏ) (194126பி) (194126சி)
(194126டி) (194129ஏ) (194129பி)
(194129சி) (194164ஏ) (194164பி)
(194209ஏ) (199274பி)

**கோப்பாய்**

(177402ஏ) (186422ஏ) (186422பி)
(186550ஏ) (186583ஏ) (186705ஏ)
(190303ஏ) (190303பி) (190303சி)
(190320ஏ) (190320பி) (190324ஏ)
(190332ஏ) (190332பி) (190390ஏ)
(190390பி) (190391ஏ) (190414ஏ)
(191251ஏ) (191251பி) (191251சி)
(191251டி) (191262ஏ) (191286ஏ)
(191286பி) (191603ஏ) (191603பி)
(191608ஏ) (191608பி) (191619ஏ)
(191700ஏ) (191725ஏ)

**மருதங்கேணி**

(193902ஏ)

**நல்லூர்**

(187359ஏ) (187426ஏ) (187448ஏ)
(187448பி) (187578ஏ) (187579ஏ)
(187595ஏ) (191258ஏ) (191258பி)

**பருத்தித்துறை**

(189972ஏ) (189972பி) (192655ஏ)
(192655பி) (192659ஏ) (192718ஏ)
(192734ஏ) (192734பி) (192754ஏ)
(192757ஏ) (192779ஏ) (192779பி)
(192779சி) (192779டி) (192779ஈ)
(192779எவ்) (192779ஜி) (192832ஏ)
(192832பி) (193797ஏ) (193797பி)
(193797சி) (193797டி) (193827ஏ)
(193827பி) (193845ஏ) (193862ஏ)
(193862பி) (193864ஏ) (193882ஏ)
(193882பி) (193888ஏ) (193888பி)
(193956ஏ) (193956பி) (193991பி)
(193991ஏ) (194001ஏ) (194001பி)
(194020ஏ) (194020பி) (194020சி)
(194068ஏ) (194083ஏ) (194104ஏ)
(194106ஏ) (194106பி) (194106சி)
(194170ஏ) (194170பி) (199927ஏ)

**உடுவில்**

(179575ஏ) (187948ஏ) (190572ஏ)
(191270ஏ) (க-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.இ.தாமோதரம்பிள்ளை** ஜே.பி.

*(ஓய்வுபெற்ற பிரதமலிகிதர், வேலணை)*

அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட இவர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளான ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, யாழ்.கச்சேரி ஆகிய இடங்களில் மனித நேயத்துடன் சேவை செய்து மக்களின் மதிப்பைப் பெற்றவர்.

இவரது சேவை தொடர்ந்தும் சிறப்புற வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம், வேலணை - 4,
வேலணை தெற்கு விவசாய சம்மேளனம்,
தீவக சனசமூக நிலையங்களின் சமாசம்,
நியூ கருமாரி நகைமாடம், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
வேலணை வாழ் மக்கள்.

(88910)

## வாழ்த்துகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குரு சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள அவர்கள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவாகியதையிட்டு அவரை மனதார வாழ்த்தி வணங்குகின்றோம்.

**இராமலிங்கர் கார்த்திகேசர்**
(காத்தியார் சந்ததியினர்)
நயினாதீவு.

(88911)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பூவுலகில் 16 - 05 - 1922



வானுலகில் 12 - 05 - 2001

### திருமதி நடராசா செல்வநாயகியம்மா

இன்று அன்னாரது சபிண்டீகரண வைபவமும் 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில், சுன்னாகம்.* - **குடும்பத்தினர்.**

(88900)


## சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவை

வலி.வடக்கு,ஜுன்11

யாழ்.மாவட்ட மக்களின் நன்மை கருதி சமூக சேவைகள், மீனவ சமூக வீடமைப்பு அமைச்சு அடுத்த மாதம் முதல்வாரத்தில் யாழ் நகரில் நடமாடும் சேவையொன்றை நடத்தவுள்ளது.

இந்த நடமாடும் சேவைபற்றிய முன் நடவடிக்கையாக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலகங்கள் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவைமூலம் வறிய மக்களுக்கும் மற்றும் மீன்பிடித் தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், முதியோர்கள், வயோதிபர்கள் இச் சேவை மூலம் அதிக பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும என்றும் அரசவட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

நடமாடும் சேவைக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை உரிய அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். (க-10)

## மணற்காட்டில் மீண்டும் ப.நோ.கூ.கிளை

வடமராட்சி கிழக்கு,ஜுன்11

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் மீண்டும் மணற்காட்டில் சங்கக் கிளைக் கடை ஒன்றை திறந்துள்ளது.

கடந்த காலத்தில் அப்பகுதியில் நிலவிய அசாதரண சூழ்நிலை காரணமாக இக் கிளைக் கடை கடந்த ஒருவருட காலமாக மூடப்பட்டிருந்தது.

அம்பன், குடத்தனை, குடத்தனை வடக்கு ஆகிய இடங்களிலும் மூடப்பட்டிருந்த கடைகள் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன. (க-182)

## மூளை மலேரியா கட்டுப்பாட்டில்

வடமராட்சி கிழக்கு,ஜுன்11

வடமராட்சி கிழக்கில் குடத்தனை அம்பன் பகுதிகளில் தீவிரமாகப் பரவிவந்த மூளை மலேரியா கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அப்பகுதியின் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அப்பகுதியில் 15 பேர் மூளை மலேரியா நோயினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சுகாதாரப் பகுதியினர் அப்பகுதியில் மேற்கொண்ட தீவிர தடுப்பு நடவடிக்கைகளை அடுத்து இந்நோய் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அதேவேளை மலேரியா தடுப்பு இயக்கப் பிரிவு உத்தியோகத்தர்கள் அப்பகுதிகளிலுள்ள வீடுகள் குளங்கள், கைவிடப்பட்ட கிணறுகள் மற்றும் நீர்நிலைகளில் நுளம்பை ஒழிப்பதற்கான பணியினை மேற்கொண்டு வருகின்றார்கள். (க-182)

## கல்விச்சாலைக் காட்சிகள்



அச்சுவேலி மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் திருமதி ச.கனகராசா, கோப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரம் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-7-11)



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை, உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், வித்தியாலய அதிபர் அ.நடராஜா ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-7-90)



திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

விருந்தினர்களில் ஒருவரான கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஆசிரியர் எஸ்.அருணகிரிவாசன் மாணவன் ஒருவனுக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.மகேஸ்வரன் காணப்படுகின்றார். (க-7)



யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற சாரணர் நிகழ்வில் மாவட்ட விருதுபெற்ற யாழ்.பரி.யோவான் கல்லூரி மாணவன் இராமதாசன் தேவமாறனுக்கு யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் பி.போறஸ் ராஜசிங்கம் விருதுவழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-51)

# மக்கள் வங்கி அதிகாரி இடமாற்றம்; இனக்குரோதப் போக்கே காரணம்!

## மொழிவழி ஊழியர் சங்கம் அமைக்கப் போவதாக எச்சரிக்கை

யாழ். அபிவிருத்தியில் மக்கள் வங்கியின் ஊடாகத் தீவிர பங்காற்றிய மக்கள் வங்கி வட வலய உதவிப் பொது முகாமையாளர் க. திருநாவுக்கரசுவின் திடீர் இடமாற்றத்தையும், தொடர்ந்து மக்கள் வங்கியின் யாழ்ப்பாண உதவிப் பிரதேச முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகத்தின் பொறுப்புக்களைப் பறித்த செயலையும் கண்டித்து யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கச் செயலாளர் தி. ஸ்ரீஸ்கந்தராசாவும், மேற்படி சங்க உபசெயலாளரும், யாழ். மாவட்ட மக்கள் வங்கிக்கிளை ஊழியர் சங்கச் செயலாளருமான கோ. சற்குணபாலனும் இணைந்து வெளியிட்ட அறிக்கை இது.

இலங்கையில் உள்ள 16 அரச, தனியார் வங்கிகளைச் சேர்ந்த சுமார் 32000–க்கும் மேற்பட்ட ஊழியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது எமது தாய்ச்சங்கம். இச் சங்கத்தின் சிற்றூழியர் தரத்திலிருந்து உதவிப் பொது முகாமையாளர் தரம் வரை அங்கத்தவர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றின் ஊழியர்கள் அங்கம் வகிக்கின்றனர். இச்சங்கத்தில் வலது சாரிப் போக்குடையதும், ஓரளவு இனக்குரோதக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் 'சுயாதீனக்குழு' இடது சாரிப் போக்குடையதும், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வலியுறுத்தி வருவதுமான முற்போக்கு முன்னணி என 2 பிரிவுகள் உண்டு.

இந்த முற்போக்கு முன்னணி கடந்த பல வருடங்களாகத் தாய்ச் சங்கத்தைக் கைப்பற்றி ஊழியர்களின் நலன்களில் மட்டுமன்றி முக்கியத்துவம் வாய்ந்த நாட்டின் ஏனைய பிரச்சினைகளிலும் நாட்டின் பலம் வாய்ந்த ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து பல போராட்டங்களில் பங்கு பற்றி அதில் வெற்றி கண்டது. மேலும் இம் முற்போக்கு முன்னணி பல்லாயிரக்கணக்கான சிங்கள அங்கத்தவர்கள் கலந்து கொள்ளும் – 2 வருடங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும் – 3 பேராளர்கள் மாநாடுகளிலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இரு தரப்பையும் கோரும் தீர்மானங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றது.

யாழ். மாவட்டத்திலும் கடந்த 6 வருடங்களாக முற்போக்கு முன்னணி மாவட்ட தலைமைத்துவத்தை கொண்டுள்ளது. தலைசிறந்த தொழிற்சங்கவாதியும், ஊழியர்களின் நலன்களில் ஆழ்ந்த அக்கறை கொண்டவரும், வட பகுதி மக்கள் சேவையில் மக்கள் வங்கியூடாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவரும், வங்கி முன்னேற்றத்திற்காக உழைத்து வருபவருமான தோழர் கிங்ஸ்லி இராசநாயகம் கடந்த 10 வருடங்களாகத் தலைமைப் பொறுப்பேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வழி நடத்துகின்றார். முற்போக்குச்சிந்தனையுடைய இவர் முற்போக்கு முன்னணி சார்பில் கடந்த காலத் தேர்வுகளில் மக்கள் வங்கியில் யாழ். மாவட்ட தேர்வுகளில் போட்டியிட்டு பெரும் வெற்றியீட்டியுள்ளார். அத்தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:–

| ஆண்டு | முற்போக்கு முன்னணி | சுயாதீனக் குழு |
|---|---|---|
| 1996 | 121 | 06 |
| 1998 | 122 | 06 |
| 2001 | 144 | 23 |

ஆனால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நடைபெற்ற 2001 ஆம் ஆண்டு வங்கி ஊழியர் சங்கத் தேர்தலில் முற்போக்கு முன்னணி தோற்கடிக்கப்பட்டது. மத்தியில் 'சுயாதீனக் குழு' மக்கள் வங்கி கிளைச் சங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இக்குழுவினர் பதவியேற்றதும் அனுப்பிய முதல் சுற்றறிக்கையிலேயே யாழ்ப்பாண அங்கத்தவர்களை 'பயங்கரவாதிகள்' என மிகச் சாதுரியமான முறையில் குறிப்பிட்டு இருந்தார்கள். எமது யாழ். மாவட்ட அமைப்பு இதனைக் கண்டித்து எமது தாய்ச்சங்கத்திற்கு ஓர் அறிக்கையை அனுப்பியிருந்தது. எமது நியாயமான போராட்டங்கள் காலத்திற்குக் காலம் மழுங்கடிக்கப்பட்டு திசை மாறிப் போவதற்கு நம்மிடையே உள்ள குறுகிய நோக்கம் கொண்ட சுயநலம் மிக்க புல்லுருவிகள் காரணம் என்பது வெளிப்படை உண்மை. இலங்கை வங்கி ஊழியர் சங்கத்திலும் இத் தகையோரின் செயற்பாடுகள் இடைக்கிடையே இருந்தது தான். ஆனால் 2001 தேர்தல் வரும் வரை நாம் தாய்ச் சங்கத்திலும், கிளைச்சங்கங்களிலும் மிகப்பலமாக இருந்ததால் அவர்களால் எதுவும் செய்யமுடியாமல் இருந்தது. ஆனால் மக்கள் வங்கி, இலங்கை வங்கி கிளைச் சங்கங்களையும் சுயாதீனக் குழு கைப்பற்றிய பின்பு அவர்களின் ஏகாதிபத்தியப் போக்கும், பழிவாங்கும் படலங்களும் ஆரம்பமாகிவிட்டன என்பதைத்தான் க. திருநாவுக்கரசு அவர்களின் இடமாற்றமும், அதனைத் தொடர்ந்து எமது தலைவர் கிங்ஸ்லி இராசநாயகத்திடமிருந்து அதிகாரப் பொறுப்புக்கள் பறிக்கப்பட்ட சம்பவமும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

யாழ். மாவட்டத்திலே மக்கள் வங்கித் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய சுயாதீனக் குழுவிற்குத் தலைமை தாங்குபவர் பதவி வெறியும், சுயநலப் போக்கும், குறுகிய வழியில் இலாபம் தேடுபவரும், யாழ். மக்களின் அபிவிருத்தி பற்றிச் சிறிதேனும் அக்கறை இல்லாதவரும் ஆவர். அவரே இப் பழிவாங்கும்படலத்திற்கும் யாழ். அபிவிருத்திக்குச் சாவு மணி அடிக்கப் புறப்பட்டவர்களுக்கும் தலைமை வகிப்பவர் ஆவார்.

எம்மிடையே உள்ள ஒற்றுமையைக் குலைத்து சங்கத்தைப் பலவீனப்படுத்தி பொதுவான நன்மைகளைக் கருதாமல் பெரும்பான்மையான அங்கத்தவரின் கருத்துகளுக்கு எதிராகச் சுயநல இலாபந் தேடுவோருக்கு துணைபோத் நிற்கும் எமது தாய்ச் சங்கத்திற்கு எமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளும் நாம் இப்படியான 'பழிவாங்கல்கள் தொடர்ந்து நடைபெறாமல் நாம் பெரும்பான்மையான ஊழியர்களின் நலங் காக்க மொழிவழி ஊழியர் சங்கம் ஒன்றை அமைக்க நிர்ப்பந்திக்கப்படுவோம் என்பதனை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

க. திருநாவுக்கரசு அவர்களின் இடமாற்றத்தின் பின்னணியிலும், அதனைத் தொடர்ந்து கிங்ஸ்லி இராசநாயகம் அவர்களின் பதவிப் பொறுப்புக்கள் பறிக்கப்பட்டதன் பின்னணியிலும் இத் தகைய சுயநலக்கும்பல்களும், அதற்குத் துணைபோக நிற்கும் சுயாதீனக்குழு தொழிற்சங்க வாதிகளும் இருந்துள்ளனர் என்பதை எம்மால் ஆதாரபூர்வமாக அறியக்கூடியதாக உள்ளது. எனவே இவ்விடமாற்றத்தினை உடனடியாகஇரத்துச்செய்யும்படி வலியுறுத்தி சங்கத்தின் ஒற்றுமையையும், அங்கத்தவர்களின் ஏகோபித்த கருத்துகளிற்கு மதிப்பளிக்கும் தன்மையையும் கட்டிக்காக்கும்படி அனைத்துத் தரப்பினரிடமும் கேட்டுக் கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரின் ஏற்பாட்டில் அண்மையில் பேரவையின் அலுவலகத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் இடம்பெற்றது.

ஞானசிரோமணி பண்டிதர் சி. வடிவேலு தலைமையில் நடைபெற்ற இந்த முற்றோதல் நிகழ்வில் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஓதுவார்கள் பங்கு பற்றினர். திருமுறை முற்றோதலில் பங்கு பற்றியவர்கள் இறுதி நாளில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ–7)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு அதிபர் கி. நடராசா தலைமையில் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத் துறைப் பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல்கலந்து கொள்வார். திருமதி குமாரவடிவேல் பரிசில்களை வழங்குவார்.

(க–4)

## மின்னிணைப்புப் பயிற்சி நெறி

நவாலி, ஜூன் 11

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகார சபையினர் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலரூடாக நடத்தும் மின் இணைப்புப் பயிற்சி நெறி கடந்த முதலாம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

6 மாத காலத்திற்கு இடம் பெறும் இப்பயிற்சி நெறிக்கு 8 ஆம் வகுப்பு சித்தியடைந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட 20 பேர் தெரிவாகியுள்ளனர்.

ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 450 ரூபாவும் வழங்கப்படும் என்று பயிற்சிப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்,

(க-100)

# சூறாவளி போன்ற அழிவுகளை இனிமேல் தடுக்க முடியும்

## வளிமண்டலநிலையஅலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு — கிழக்குப் பகுதியில் எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள சூறாவளி தொடர்பாகவும், அது செல்லவுள்ள பாதையையும் துல்லியமாகக் கணிப்பிட்டு கூறுவதன் மூலம் ஏற்படவுள்ள அழிவுகளைத் தடுக்க முடியும்.

— இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலைய சிரேஷ்ட வளிமண்டல உத்தியோகத்தர் கே. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலையம் இயங்காமல் இருந்ததால் வடக்கு — கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட சூறாவளிகள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்க முடியாமல் இருந்தது.

தற்போது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலையத்தின் மூலம் மேற்படி சூறாவளி தொடர்பான விவரங்களை முன்கூட்டியே பொதுமக்களுக்கு அறிவிக்க முடியும்.

இதேவேளை —

கொழும்பில் இயங்கும் எமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் மற்றும் சந்திரஉதயம், சந்திர அஸ்தமனம் போன்ற நேரங்களையும், சந்திரகிரகணம், சூரிய கிரகணம், அமாவாசை இருப்பு போன்றவற்றையும் முஸ்லிம்களின் றம்ளான் பண்டிகை பிறைதென்படும் நாள், நேரம் தொடர்பான விடயங்களையும் —

முஸ்லிம்களின் தொழுகை நேரங்களையும் துல்லியமாகக் கணிப்பிட்டு வழங்கவுள்ளோம்.

இந்த விவரங்கள் தேவைப்படுபவர்கள் எமது அலுவலகத்துடன்தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

(க-6)

## யாழ். பல்கலையில் சாகச நிகழ்ச்சி

யாழ்ப்பாணம். ஜூன் 11

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் அறக்கொடைவளர்ச்சி நிதிக்காக பருத்தித்துறை சாண்டோ எம். துரைசிங்கத்தின் சிஷ்யன் விஜயமோகனுடைய மாணவர்களின் வீர தீரச் செயல்கள் நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி வீரதீரச் செயல் சாகச நிகழ்ச்சி ஆரம்பமாகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

( க –6 )

## படையினரின் துண்டுப் பிரசுரம்

கொழும்பு, ஜூன் 11

'எதிர்காலத்தில் இளைஞர் சமுதாயம் இருக்குமா?' என்னும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகள் தமிழில் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அந்தப் பிரசுரத்தில் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(க)

# கதிர்காமம் செல்லும் சிங்களவர் தமிழரை மதிக்காதது ஏன்?

## அமைச்சர் அத்தாவுட கவலை

கொழும்பு, ஜூன் 11

கதிர்காமக் கந்தனையும் பத்தினி தெய்வத்தையும் வழிபடச் செல்லும் சிங்கள மக்கள்தமிழ் மக்களுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை.

— இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார் இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு, கனிப்பொருள் மூலவள அபிவிருத்தி அமைச்சர் அத்தாவுட செனிவிரத்ன.

தெரணியகல தேர்தல் தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதி ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

புத்தரின் போதனைப்படி உலக மக்கள் அனைவரும் ஒரே இனம், மனிதகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை எம்மத்தியில் வளர வேண்டும். இன்றைய காலகட்டத்துக்கு ஏற்ப சிந்தித்துச் செயற்படும் சமூகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

நாட்டில் நடைபெற்று வரும் யுத்தத்துக்கு அரசியல் தீர்வே அவசியமானதாகும். யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இதனை உணர்ந்து பேச்சுகளில் பங்குபற்ற முன்வர வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(க–6)

## வல்லாரை செய்வதற்கு ஊக்குவிப்பு

வடமராட்சி கிழக்கு, ஜூன்11

வடமராட்சி கிழக்கின் குடத்தனை, அம்பன் பகுதிகளில் பொன்னாங்காணி, வல்லாரை ஆகிய மரக்கறிப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் முயற்சியை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

வயல்நில வரம்புகள், நீர் நிலைகள் உள்ள இடங்கள் ஆகியவற்றில் இப்பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(க–182 )

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் 5 3/4 பரப்புக்காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி பாலசுசீலா தயானந்தன், 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். ஒவ்வொரு நாளும் 3 மணிக்குப் பின்பு சந்திக்கலாம். (88819)

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இல.558 இல் ஒரு பரப்புக் காணியில் இரு கடைகள் விற்பனைக் குண்டு. ஒவ்வொரு கடையும் தலா **15'x30'** விஸ்தீரணம் உடையவை. தொடர்புகளுக்கு: **T.P** 597450/077-307227. **(C/17039)**

## தவறிவிட்டது

கோப்பாயைச் சேர்ந்த செ.ஜெகநாதனின் தேசிய அ.அட்டை (இல. 507960235v), ஜெ.தவமணிதேவியின் விசேட அ.அட்டை (இல.0907021279), ஜெ.கார்த்திகாவின் விசேட அ.அட்டை (இல.0907004549) என்பன பண்டத்தரிப்புச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பண்டத்தரிப்பு பிரதான வீதி, ஐயா கடையில் ஒப்படைத்துதவவும். (88868)

தொட்டிலடி, சங்கானை என்னும் முகவரியைச் சேர்ந்த மயில்வாகனம் மகேந்திரன் என்பவரது தேசிய.அ. அட்டை (இல.691152197**V**), விசேட அ.அட்டை, தொழில் அ.அட்டை (ஆசிரியர்) என்பன 4.6.2001 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (88906)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 26 வயதுடைய, உயரம் 5' 9", பூராடம் 3ஆம் பாதம், கிரகபாவம் **61/2,** அரசாங்க உத்தியோக மணமகனுக்கு பெற்றோர் படித்த, அழகிய, நற்பண்புள்ள மணமகளைத் தேடுகின்றார்கள். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1303, மே/பா. உதயன். (88907)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38வயது, சித்திரை நட்சத்திரம் முதலாம் கால், பாவம்6, தனியார் கம்பனியில் **"COMPUTERIST"** ஆக வேலை செய்பவர்க்கும்/ சுவிஸில் நிரந்தர குடியுரிமை பெற்ற 32 வயது, சுவாதி நட்சத்திரம், 7இல் செவ்வாய், 52பாவமுள்ள மணமக்களுக்கு அழகிய மணமகள் தேவை. கொழும்பில் திருமணம் செய்வார். தொடர்பு: திருஞானசம்பந்த மூர்த்தி, 314,கோயில் வீதி, நல்லூர்,. **T,P3409** **(88847)**

## இது இந்து மதம்

தகுந்த சான்றுகளுடன் இந்து மதம் பற்றிய உண்மைகளைத் தெளிவாகச் சொல்கிறது சாமிஜி எழுதிய "இது இந்து மதம்". யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஆணிவேராகிய சைவ சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்டோர் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். விலை ரூபா 50/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88876)

## இலக்கியக் கட்டுரைகள்

**A/L** மாணவர்களே, 12 சிறுகதைகள், 'வீடற்றவன்' நாவல், 'பொருளோ பொருள்' நாடகம் ஆகியவற்றுடன் இலக்கிய விமர்சனத்துக்கும் விளக்கம் எழுதியிருக்கிறார் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. வாசித்துப் பயனடையுங்கள். (88828)

## ஆண்டு 5 புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001க்கான அம்பிகைபாகனின் புத்தம் புதிய வழிகாட்டி, சொற்பப் பிரதிகளே கைவசம் உள்ளன. விலை ரூபா 240/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88877)

## ஆங்கிலம் WORK BOOK

ஆண்டு 6 மாணவர்களுக்கான ஆங்கில பாடத்துக்குரிய **New class work Book by Premkumar**. தரமான புத்தகம். விலை ரூபா 70/=. தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88878)

## Birthday Cards

புத்தம் புதிய டிசைன்களிலான வண்ணமிகு **Birthday Cards, Wedding Cards** என்பன விற்பனையாகின்றன. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேட கழிவு தரப்படும். தொடர்பு: பரணன், 138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 2365. (88879)

## வியாழ மாற்றம்

13-06-2001இல் நிகழும் வியாழ மாற்றம் உங்களுக்கு நன்மையானதா? எல்லா ராசிகளுக்கும் பலாபலன்களை அறிய ஆவலா? வேலணை சோதிடர் **V.A.**சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். சனீஸ்வர, இராகு-கேது மாற்றப்பலன்களும் அடங்கியுள்ளது. (88905)

## விற்பனைக்குண்டு

**21/4M** நீளமும் **1M** அகலமும் கொண்ட ரியூட்டறிக்குப் பாவிக்கக் கூடிய விளம்பரப்பலகையும், புத்தக அலுமாரியும், வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 417, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்) (88901)

## தவறிவிட்டது

அளவெட்டி வடக்கு, வளர்மதி நாகராசா என்பவருடைய தே.அ.அ. (இல.718301734**V**), விசேட அ.அ.(இல. 0907000712), அலுவலக அ.அட்டை என்பன 01.06.2001 அன்று நாச்சிமார் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுததவர்கள் வலயக் கல்வித் திணைகளம் , மருதனார்மடத்தில் ஒப்படைத்துதவவும். (88898)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள், புற்றுநோய் உதவிக் கொடுப்பனவுகள் கொடிகாமம், மிருசுவில், வரணி, கச்சாய், விடத்தற்பளை, சாவகச்சேரி ஆகிய உப அஞ்சல் அலுவலகங்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

மந்துவில் உப அஞ்சல் அலுவலகத்தில் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன என்றும் - மேற்படி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்பவர்கள் காலம் தாழ்ததாது அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் -சம்பந்தப்பட்ட அஞ்சலதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-7)

---

## பழைய மாணவர் சங்கம்
## புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை

# கல்லூரி தின விழா

**காலம்:-** 13-06-2001 (புதன்)
காலை 10.00 (புதிய நேரம்)

**இடம்:-** புனித அந்தோனியார் கல்லூரி மண்டபம்

**விடயம்:-** பழைய மாணவர்கள் ஒன்றுகூடலும்
மதிய போசன விருந்தும்.

*பிரதம விருந்தினர்:-*

**திரு.N. மதனராஜா**
(பழைய மாணவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதேச சபைத் தலைவர், ஊர்காவற்றுறை)

*சிறப்பு விருந்தினர்கள்:-*

**திரு.B.A. அருமைநாயகம்**
(பழைய மாணவன், யாழ். மாவட்ட இலங்கை வங்கிகளின் பிரதான முகாமையாளர்)

**அருட்திரு. J.A. யேசுதாசன்**
(அதிபர், புனித. அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

**திரு.J.X. செல்வநாயகம்**
(உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை)

**மதியபோசன விருந்தில் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் தங்கள் பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

→ மதிய போசன விருந்துக்கான ஆகக் குறைந்த அன்பளிப்பு ரூபா 100/=

→ கல்லூரி தினம் அன்று, பழைய மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான *கரபந்தாட்டப்போட்டி (செற் அப்)* நடைபெறும்.

**அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்போடு அழைக்கின்றோம்.**

இ.ஜெயால்ட் அன்ரனி,
*செயலாளர், பழைய மாணவர் சங்கம்,*
*புனித. அந்தோனியார் கல்லூரி,*
*ஊர்காவற்றுறை.*

(88914)

---

# கேள்வி அறிவித்தல்
## பருத்தித்துறை பிரதேச சபை

கீழே விவரிக்கப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளை நிறைவேற்றுவதற்காகக் கேள்விகள் 27.06.2001ஆம் திகதி 12.00 மணிவரை எம்மால் வழங்கப்பட்ட படிவங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்கான தகுதிக்கு, பொருத்தமான சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடியவர்களுக்கும், நிறைவேற்றுவதற்கான தகுதியை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட வைப்புக்கள் செலுத்துவதன் பேரில் 26.06.2001ஆம் திகதி பிற்பகல் 16.00 மணிவரை படிவங்கள் எம்மால் வழங்கப்படும். நிரல் 1,2இன் வேலைகளுக்கு ஒரு கேள்விக்காரருக்கு ஒரு வேலைக்கே படிவம் வழங்கப்படும்.

கேள்வியாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு "தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி" என்ற முகவரிக்கு குறித்த தினத்திற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவஞ்சலிலோ அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். கேள்விப் படிவம் தாங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எக்கேள்விக்கான பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 27.06.2001ஆம் திகதி 14.00 மணிக்கு கேள்விச் சபையால் பரிசீலிக்கப்படும்.

### அட்டவணை

| கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் |
|---|---|---|
| 01. பொலிகண்டி ஆலடி வீதி புனரமைப்பு | 10,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 02. சாரையடி நறுவிலி வீதி புனரமைப்பு | 8,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 03. கார்த்திகேசர் வீதி புனரமைப்பு | 1,500/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 04. பாலாவி பற்சந்தி வீதி புனரமைத்தல் | 1,250/- | 100/-உம் பொ.சே.வரியும |
| 05. நாவலர் வீதி புனரமைப்பு | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும |
| 06. பனிக்கர் குளம் திருத்தம் | 500/- | 100/-உம்பொ.சே.வரியும் |
| 07. குழாய்க்கிணறுஅமைத்தல் கொற்றாவத்தை | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 08. உபயகதிர்காமம் பாலம் அமைத்தல் | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 09. தம்பத்தனை வீதி புனரமைத்தல் | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 10. மணற்காடு கடற்கரை வீதி அமைத்தல் | 1,750/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 11. திறந்த கிணறு அமைத்தல் குடத்தனை | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 12. திறந்த கிணறு அமைத்தல் பொற்பதி | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 13. திறந்த கிணறு அமைத்தல் மணற்காடு | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 14. மீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் மணற்காடு | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 15. அல்வாய் மேற்கு நெல்லி ஓடை வீதி புனரமைத்தல் | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 16. துன்னாலை மாதாகோயில் வீதி புனரமைத்தல் | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 17. அல்வாய் திருவி சீமா ஒழுங்கை புனரமைப்பு | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 18. அல்வாய் வடக்கு தகனை சந்தி வெள்ளி விழுந்தான் கோயில் வீதி செப்பனிடல் | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 19. தட்டாதெரு ஒழுங்கை இரண்டாவது தார் ஊற்றுதல் | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 20. அம்பன் புதிய சுடலை வீதி அமைத்தல் | 1,000/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 21. எட்பிலோ கிணறு சுற்றுமுற்றும் அமைத்தல் குடத்தனை | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 22. பனை நின்றான் காட்டுக்கிணறு சுற்றுமுற்றம் அமைத்தல் குடத்தனை | 250/- | 100/-உம் பொ.சே.வரியும் |
| 23. பழைய சந்தைக்கிணறு சுற்றுமுற்றம் அமைத்தல் குடத்தனை | 250/- | 100/-உம் பொ.சே.வரியும |

*மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.*

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யு.எம்**
தலைவர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

*தலைமை அலுவலகம்,*
*புலோலி.*

(C/17062)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி
## இராயேஸ்வரி யோகச்சந்திரன்

**அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீர்!**
**இன்று எமைப் பிரிந்து விட்டீர்!**
**உங்களை எம்மால் மறக்க முடியவில்லையே!**

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திகின்றோம்.

நாளை (12.06.2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து அநுதாபம் தெரிவித்த நண்பர்கள், உறவினராகிய அன்புள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*வேம்படி,*
*வல்வெட்டித்துறை.*

**-செ.யோகச்சந்திரன்**
குடும்பத்தினர்.

(88917)

# துரைராசா நினைவு நிகழ்வு இன்று

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் 7ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

காலை 10.30 மணிக்கு பல்கலைகழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பி.ப 3.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பேராசிரியர்கள் அ.சண்முகதாஸ், க.பாலசுப்பிரமணியம், கலாநிதி ந.சிவராசா ஆகியோர் உரையாற்றுவர். (3-5)


## முக்கிய அறிவித்தல்


### வர்த்தக கைத்தொழில் சங்கம்
மீசாலை

சங்க எல்லைக்குட்பட்ட எமது அங்கத்தவர்களுக்கு யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்ட படிவத்தினை சங்க உப செயலாளரிடம் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் (16-06-2001) சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/17064) - செயலாளர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

எமக்காக 01 - 07 - 1948



தெய்வமாக 12 - 05 - 2001

அமரர்
### குழந்தையன் குணரத்தினம்

பாசத்தின் தெய்வமே! உதிரத்தை உரமாக்கி
உழைத்து எம்மை உயரவைத்து அழியாத அன்பும்
அணையாத நினைவினையும் தந்து, போதும் இல்வாழ்வு
என வாழ்வை இடையினில் முடித்ததேனோ?
எங்களை ஒரு நாழிகை தானும் பிரிந்ததில்லையே!
எமையெல்லாம் ஆறாத துயரினில் ஆழ்த்தி விட்டு - மீளா
இடம் செல்ல எப்படி மனம் வந்தது அப்பா?

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்

*மடத்தடி,*
*சண்டிலிப்பாய்.* (88880)

மனைவி, மக்கள், உறவினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய நிர்வாகசபை உறுப்பினர் திரு.ஐ.சிறிநிதி அவர்களின் அன்பு மகன்

### சிறிநிதி கபில்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயரம் அடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.* (88923)

பரிபாலன சபையினர்,
ஞானவைரவர் ஆலயம்

## மரண அறிவித்தல்

### சிறிநிதி கபில்
(வயாவிளான் ம.ம.வித்தியாலய ஆண்டு 10 மாணவன்)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறிநிதி கபில் நேற்று (10.06.2001) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் சிறிநிதி - நிர்மலா தம்பதிகளின் அன்பு மகனும் கதஸ், கென்சன், கனிஸ்ரன், திவ்யா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருஸ்ணபிள்ளை, கமலம், ஐயாத்துரை, அரியமணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-06-2001) திங்கட்கிழமை மு.பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.*
**T.P.** *070-213085*
*070-212976* (88922)

தகவல்:
ஐ.மகேந்திரம்
(பெரியதகப்பன்)

## நற்கருணை விழா

யாழ்ப்பாணம்,ஜூன்11

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை நற்கருணை விழாவும், நற்கருணைப்பவனியும், நாளை மறுதினம் அந்தோனியார் திருநாள் பாடல் பூசையும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஜ-15)

## டிராக்டரில் இருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரத்தின் மட்காட்டில் இருந்து விழுந்து, பெட்டிச் சில்லுக்குள் அகப்பட்டு நெரியுண்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

காரைநகர், களபூமிக்கும், தங்கோட்டைக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில், களபூமியைச் சேர்ந்த சுப்பிரமணியம் நவரட்ணம் (வயது 56) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-15)

## வில்லூன்றி கேணிக்குள் வீழ்ந்து மாணவன் பலி

யாழ்ப்பாணம்,ஜூன்11

பாடசாலை நண்பர்களுடன் வில்லூன்றி கேணிக்கு நீந்தச் சென்றவர் கேணிப்படிக் கட்டுச் சறுக்கி கேணிக்குள் தவறி வீழ்ந்து மரணமானார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆனைக்கோட்டை, பொன்னையா ஒழுங்கைப் பகுதியைச் சேர்ந்த சிவகுரு சுஜிந்தன் (வயது 14) என்பவரே உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. நேற்று அங்கு நடைபெற்ற மரணவிசாரணையின் பின் சடலம் தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

மரண விசாரணையை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி க.கேசவன் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (ஜ-15)


அறிவொளி ~ NALLUR
PHYSICS
A/L - 01 ஆரம்பம்: 12.06.01
சடமும் கதிர்ப்பும்
TUE. 5 - 6
A/L - 03 ஆரம்பம்: 16.06.01
அலைகளும் அதிர்வுகளும்
SAT. 3 - 4
திரு.ஸ்பெல்மன்
COM . MATHS
திரு.B.ரவீந்திரன் B.SC.
(88926)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன், கரண், விவேக் மற்றும் பலர் நடித்த
கண்ணெதிரே தோன்றினாள்
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
15.06.2001 முதல்
சிட்டிசன்
(C/17030)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(88696)

லஷ்சுமி இணுவில்
சரத்குமார், தேவயானி, ஆனந்தராஜ் நடிப்பில்
பாட்டாளி
(ரீல்ஸ்)
வெகுவிரைவில்
எங்க வீட்டு பிள்ளை
காட்சிகள் : 10.30, 2.30 (பு.நே.)
(88929)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 03 - 05 - 1941



உதிர்வு 13 - 05 - 2001

அமரர்
### திருமதி இராசேந்திரம் சிகாமணி
(பாக்கியம்)

அமரரின் மரணச்செய்தி கேட்டு எம் துயரில் கலந்து கொண்டு இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவி புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்வதோடு -

நாளை (12-06-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

*பருத்தியடைப்பு,*
*ஊர்காவற்றுறை.* (88927)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை
(G.S.பிள்ளை)
*(ஓய்வுபெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர்)*

'செல்லமஸ்', உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் 09.06.2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் ஞானப்பிரகாசம் - லூர்த்தம்மா தம்பதியினரின் அருமை மகனாரும், அருள்மணியின் அன்புக் கணவரும் அருட்தந்தை எயின்சிலி றொஷான் (ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்), தர்ஷிக்கா (செயலர், லக்ஷ்மி பிக்சர்ஸ், கொழும்பு), நிஷாந்தன் (யு/டு 2001, புனித பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கராஜாவின் சகோதரனும், காலஞ்சென்ற கண்மணி, மனோன்மணி, காலஞ்சென்ற அழகரட்டினம், பூபாலசிங்கம், அந்தோனப்பிள்ளை (குமார், லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்லம், அக்னஸ் ஆகியோரின் பெறாமகனும் மாசிலாமணி, தேவசகாயம் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.06.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து இல.26, ஸ்கூல் அவனியூ, புகையிரத நிலைய வீதி, தெஹிவளையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**54,2/1,** *இராஜசிங்க வீதி,*
*வெள்ளவத்தை.*
***T.P -595892***
***7-14308, 072662831***
(88918)

தகவல்:
அருட்திரு. எஸ்.எயின்சிலி றொஷான்
*(மகன்)*
*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

### நடராசா இராசேந்திரன்

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசேந்திரன் கனடாவில் 08.06.2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லையா நடராசா (முன்னாள் அரச மரக்கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர்) மற்றும் திலகவதியின் அன்பு மகனும் பாலேஸ்வரியின் பாசமிகு கணவரும் அருண்குமார், நதர்ஷா (சிந்து, கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற வினாசித்தம்பி மற்றும் பூரணத்தின் மருமகனும் திருமதி கிருஸ்ணாம்பிகை, சரவணபவன், திருமதி இராசேஸ்வரி, ராஜகோபாலன் (பாலு, பிரான்ஸ்), திருமதி விஜயலட்சுமி (பிரான்ஸ்), திருமதி வீரலெட்சுமி, திருமதி லதா (லண்டன்), அருள்நந்தி (கனடா), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.06.2001) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*85, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*
**T.P.** *021-2103* (88925)

தகவல்:
மு.பரம்சோதி
(மைத்துனர்)

### வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம்

வதிரி கதிர்காம கோயிலடியைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் நேற்று (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் ஜெயநாதன் (லண்டன்), தர்சினி(பிரதேச சபை - கரவெட்டி) தஷாந்தினி, பவசுஜிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரத்தினத்தின்(பிரான்ஸ்) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*வதிரி.* (C/17063)

தகவல்:-
இ.தர்சினி
(மகள்)

# வடக்கில் பெரும் நடவடிக்கைக்கு அரசுப் படைகள் தயாராகுகின்றன

## 'புலிகளின் குரல்' தகவல்

லண்டன்,ஜூன்11

வடக்கில் தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பாரிய படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் இரகசியமாகத் திட்டமிடுவதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்துள்ளது.

திடீர் முன்னேற்ற முயற்சியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள படையினருக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுவருவதாகத் தெரிகின்றது.

பலாலி பெருந்தளத்தில் 53 ஆவது படையணியின் சிறப்புப் படைப பிரிவு, கொமாண்டோப் பிரிவு, வான் வழித் தாக்குதல் - நகர்வுப் பிரிவு, கடற்படை, விமானப்படை ஆகியவற்றுக்கு விசேட பயிற்சிகள் அளிக்ப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயேந்திரா, 55 ஆவது படையணி தளபதி சுனில் தென்னக்கோன் ஆகியோர் அண்மையில் அமெரிக்கா சென்று குறுகிய காலப் பயிற்சியைப் பெற்றுத் திரும்பியமை இந்த இராணுவ நடவடிக்கைக்காகத்தான்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட முக்கிய தளபதிகள் அண்மையில் திருமலையில் மாநாட்டை நடத்தி அதன் பின்னர் கடல் ஒத்திகை ஒன்றை அங்கே மேற்கொண்டது வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள நடவடிக்கையின் முன்னோடி ஏற்பாடேயாகும் - இப்படி புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது.

(3-164)

### யாழ். சைவ பரிபாலன சபையினரால்

## சைவ சித்தாந்தத் துறையில் 34 பேருக்கு நேற்று பட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் நேற்றுக்காலை நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் சைவ சித்தாந்தத் துறையில் 34 பேருக்கு பட்டங்கள் வழங்கப் பட்டன.

15 பேருக்கு சித்தாந்த பண்டிதர் பட்டமும் 10 பேருக்கு சைவ சித்தாந்த பாலபண்டிதர் பட்டமும் 9 பேருக்கு சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர் பட்டமும் வழங்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் இந்தப் பட்டங்களை வழங்கினார்.

சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோர்:-

சுமதி பரமேஸ்வரன் (நீர்வேலி), சுபுஸ்பரேகா (நீர் வேலி), சிவஞானராசா நிமலா (மல்லாகம்), திருமதி சத்தியரூபன் தயாநிதி (நீர்வேலி), காஞ்சனா உருத்திரகுமாரன் (தெல்லிப்பழை), கலையரசி சத்தியபாலன் (உரும்பிராய்), சங்கீதா சதாசிவசர்மா (நீர்வேலி), மனோரஞ்சினி சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை), நா.கலாதரன் (நாவற்குழி).

சைவசித்தாந்த பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோர்:-

விசுவலிங்கம் அபிராமி (புத்தூர்), கிருபாகினி குமாரசாமி (அச்சுவேலி), குணரத்தினம் மாலினி (கந்தர்மடம்), லலிதா குமாரசிங்கம் (மல்லாகம்), சிவாஜினி சிவபாதம் (ஏழாலை), செல்வராசா ரேவதி (நீர்வேலி), சிவசோதி ஐயாத்துரை (தெல்லிப்பழை), இந்திரா செல்வலிங்கம் (நீர்வேலி), அம்பலவாணர் ராஜரட்ணம் (யாழ்ப்பாணம), சிவயோகநாதன் முகுந்தன்.

சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தோர்:-

கௌசல்யா நடேசன் (புத்தூர்), நித்தியானந்தன் தசீதரன் (மானிப்பாய்), ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் (குப்பிளான்), பாலசுப்பிரமணிய ஐயர் சர்வேஸ்வரசர்மா (இணுவில்), ஜெயந்தி கோபாலப்பிள்ளை (கொக்குவில்), பத்மீரா தாமோதரம்பிள்ளை (யாழ்ப்பாணம்), வேலாயுதபிள்ளை கமலேஸ்வரன் (கந்தர்மடம்), ஜெயகௌரி நாகேந்திரம் (நீர்வேலி), ஜெயக்குமாரி கந்தவேள் (கொக்குவில்), சத்தியபவானி செபமாலைதாசன் (வண்ணார் பண்ணை), ருத்ராதேவி பரமநாதன் (ஆனைக்கோட்டை), திருமதி தி.இராஜேஸ்வரன் (நல்லூர்), இராசரத்தினம் இராஜேஸ்வரன் (நல்லூர்), சொ.கோவிந்தர் (சண்டிலிப்பாய்), அருணாசலம் மீனலோசினி (கொழும்புத்துறை).

(க-4-7)

## தண்ணீர் விநியோகப் பொறுப்பும் கொழும்பு மாநகரசபைக்கு இல்லை

கொழும்பு,ஜூன்11

கொழும்பு மாநகரசபையின் பொறுப்பில் உள்ள குடிதண்ணீர் விநியோகத்தை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபை எதிர்வரும் 15 ஆம் திகதி பொறுப்பேற்கவிருக்கும் அதேவேளையில் -

கொழும்புக்கான நீர் விநியோகத்தைச் சீர்குலைக்க சில சக்திகள் முயல்வதாக அரசாங்கம் எச்சரித்துள்ளது.

நீர்விநியோகம் செய்யும் குழாய்களை அழிக்க நாசகாரர்கள் முற்படுவது குறித்துத் தகவல் கிடைத்துள்ளது என்றும் -

பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் -

தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு அதிகாரசபைத் தலைவர் எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

நீர்விநியோகத்தை நவீனமயப்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காகவே இந்தப் பணியை அரசாங்கம் பொறுப்பேற்க முடிவு செய்துள்ளது என்றும் -

இதைப் பொறுக்க முடியாதவர்களே நாசகாரச் செயல்களில் ஈடுபட முனைவதாகவும் - அவர் மேலும் சொன்னார்.

ஐ.தே.கட்சியின் பொறுப்பில் உள்ள கொழும்பு மாநகரசபையின் கட்டுப்பாட்டிலிருந்து விகாரமாதேவி பூங்காவின் நிர்வாகத்தை அரசு ஏற்கனவே பறித்துவிட்டது என்பது தெரிந்ததே.

(உ-3-9)

### ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு அதுபற்றி ஐ.தே.கட்சியுடன் பேசுவது என்று முடிவுசெய்யப்பட்டது.

ஆட்சியில் சிறுபான்மைக் கட்சிகள் ஆதிக்கம் செலுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு இது வாய்ப்பாக அமையும் என்று பிரதமர் அங்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடனேயே தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

தேசிய அரசுக்கு மட்டுமல்ல அது தொடர்பான கூட்டத்துக்குக் கூட ஐ.தே. கட்சி உடன்படமாட்டாது என்றும் -

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் வரை இந்த நிலைப்பாட்டையே கட்சி கொண்டிருக்கும் என்றும் -

ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

- இப்படி அந்தப் பத்திரிகை மேலும தெரிவித்துள்ளது.

(உ-3)

### ஆலோசனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகர் அதற்குக் கட்டுப்படுவாரா? அல்லது நாடாளுமன்றம் விசேட உரிமை கொண்ட அமைப்பு என்ற அடிப்படையில் நீதிமன்றத் தீர்ப்பை புறந்தள்ளி விட்டு பிரேரணை தொடர்பான வழமையான நடவடிக்கைகளைத் தொடர்வாரா? - என்று கேள்வி எழுப்பப் படுகின்றது.

இந்த விவகாரம் குறித்துத் தமது முடிவை சபாநாயகர் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிக்கவிருக்கின்றார்.

அதற்கு முன்பாக 18 ஆம் திகதி தமமைச் சந்திக்கும்படி கே.என். சொக்ஸிக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்துள்ளார்.

அதேவேளை -

இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வாவிடம் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா சட்ட ஆலோசனை பெற்று வருவதாக ஒரு செய்தி தெரிவித்தது.

(உ-3)

### ராஜீவ் கொலை வழக்கின்

## சந்தேகநபர்களில் இருவர் பாங்கொக் புறப்பட்டனர்

சென்னை,ஜூன்11

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்டுப் பின்னர் மேன்முறையீட்டில் இந்திய உயர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட இருவர் அண்மையில் சென்னை விமான நிலையத்திலிருந்து மலேசியன ஏயர்லைன்ஸ் விமானம் மூலம் பாங்கொக் புறப்பட்டுச் சென்றனர்.

ஆதிரை என்று அழைக்கப்படும் சந்திரலேகா மற்றும் விக்கி என்று அழைக்கப்படும் விக்கினேஸ்வரன் ஆகியோரே கடந்த 2ஆம் திகதி இவ்வாறு சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

வழக்கு விசாரணைக்காக இவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் இவர்களுக்கு இடையில் காதல் மலர்ந்ததாகவும் -

வழக்கில இருந்து விடுதலையான பின்னர் இருவரும் திருமணம் செய்து கொண்டதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கில் இவர்கள் விடுவிக்கப் பட்டதை அடுத்து இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்தது.

ஆனால் தாம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு தங்கள உயிருக்கு ஆபத்து ஏற்படும் என இவர்கள் இருவரும் இந்திய மேல் நீதிமன்றத்திடம் முறையிட்டிருந்தனர்.

அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அவர்களை நாடு கடத்த வேண்டாம் என்று சம்பந்தப்பட்டோருக்கு உத்தர விட்டுத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் பின்னரே தமது சுயவிருப்பின் பேரில் இருவரும் பாங்கொக் புறப்பட்டுச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ)

### தான்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானும் 'இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கும் சமாதான முயற்சிகள் விவகாரத்தில் தொடர்ந்தும் அனுசரணையாளர் போலவே செயற்படுவோம் என்றும் - அவர் கூறியுள்ளார்.

நோர்வேயில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராகத் தான் இருந்தபோதும் சமாதான முயற்சிகளில் தனது அரசியல் அபிப்பிராயங்களில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும் அவர் கூறினார்.

(உ-3-9)

### நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு சப் இன்ஸ்பெக்டர் நிரோஷன் கொலுறேக்கு கொலை அச்சுறுத்தல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவரை மன்னார் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருந்தது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 20 ஆம் திகதி மன்னார் நீதிமனறத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-3-9)

### இஸ்ரேலிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கடத்தலை முறியடிப்பதற்காக கடற்படையினர் தற்சமயம் வடக்கு - கிழக்குக் கடலில் ஆரம்பித்துள்ள 'வர்ணக் கதிர்' (வருணக் கிரண) என்ற நடவடிக்கையில் இணைவதற்காக புதிதாக நான்கு படகுகள் கொள்வனவு செய்யப்படுவதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை -

இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவுவதால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது நடவடிக்கைகள் பாதிக்கப் படுவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(உ-3)

### சொல்ஹெய்மை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான - பாரபட்சமற்ற - நடு நிலை முயற்சிக்கு பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜக்லண்ட் அவசர அவசரமாகக் கொழும்புக்கு அழைக்கப் பட்டதும், ஜனாதிபதி சந்திரிகா, கதிர்காமர் ஆகியோருடன் திரைமறைவில் இரகசியமாக மந்திராலோசனை நடத்தியதும், விடுதலைப் புலிகளை கலந்தாலோசிக்காமல் நோர்வேயின் நடுநிலைமுயற்சிக்கு தரம் உயர்த்துவதென முடிவெடுக்கப்பட்டதும், எம்மைப் பொறுத்தவரை ஒரு பொருத்தமற்ற செயலாகும். சமாதானத்திற்கான அனுசரணை முயற்சி என்பது இரு நாடுகள் மத்தியிலான உறவு பற்றிய விவகாரம் அல்ல. இது ஒரு மூன்று தரபபு விவகாரம். அதாவது நடுநிலை வகிக்கும் நாடும், பிரச்சினைக்குரிய இரு தரப்பினரும் தொடர்புடைய விவகாரமாகும். தனது சமாதான முயற்சியில் மாற்றத்தைக் கொண்டு வரும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கும்போது பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு சாராரையும் கலந்தாலோசித்து முடிவெடுப்பது நடுநிலை வகிக்கும் நோர்வே அரசாங்கத்தின் கடப்பாடாகும். ஆனால ஒரு கட்சியினரை ஓரம் தள்ளிவிட்டு சிறீலங்கா அரசுடன் இணைந்து நோர்வே எடுத்துள்ள இம் முடிவு நடுநிலை பேணுதலுக்கும், இராஜதந்திர ஒழுங்கு மரபிற்கும் முரணானதாகும்" இவ்வாறு விடுதலைப் புலிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொல்ஹெய்மின் சமாதான அனுசரணை முயற்சியில் கதிர்காமர் உட்பட சந்திரிகா அரசின் முக்கிய அரசியற் தலைவர்கள் பலருக்கு அதிருப்தி உண்டு என்பது எமக்கு நன்கு தெரியும். சொல்ஹெய்ம் சர்ச்சைக்குரிய விடயங்களைத் தவிர்த்து வந்தார். இரு சாராரையும் விமர்சிப்பதையும் தவிர்த்து வந்தார். அத்தோடு தூய்மையான நடுநிலைமையையும் பேணி வந்தார். இந்தத் தூய்மையான நடுநிலைமை என்பது சிங்கள அரசியல் உலகத்திற்குப் புதிரான விடயம். இந்தப் பண்பை சிங்கள அரசியல்வாதிகள் சந்தேகத்துடனும் அச்சத்துடனுமே அணுகுவார்கள். நோர்வேயின் சமாதான முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது. அதற்கான பெருமை சொல்ஹெய்மையே சாரும். எத்தனையோ இடையூறுகள் மத்தியிலும் இரண்டு ஆண்டுகளாக அவர் சமாதானத்திற்காக அயராது உழைத்து வந்தார். இப்படிப்பட்ட ஓர் உத்தமமான மனிதரை, தரம் உயர்த்தும் முயற்சி என இராஜதந்திர சதிவலைக்குள் சிக்கச் செய்து, அவரைப் புறம்தள்ளி ஒதுக்கிவிட சிறீலங்கா அரசு முயற்சிப்பது எமக்குக் கவலையையும் வேதனையையும் தருகின்றது" - இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(உ)

### வீடியோ படப்பிடிப்பு

மன்னார்,ஜூன்11

மன்னாரை வதிவிடமாகக் கொணடவர்கள் வெளியிடங்களுக்குச் செலலும்போது படையினரால் வீடியோ படம் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மன்னார் பஸ் நிலையத்துக்கு அருகே உள்ள சோதனை நிலையத்தில் வைத்து பொதுமக்கள் இவ்வாறு படம் பிடிக்கப்படுவதாகவும -

அதன் பின்னரே பொதுமக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் - கூறப்பட்டது.

(உ-3-9)

### நிவாரண பெர்மிட்டுக்கள்

தென்மராட்சி,ஜூன்11

வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான மே மாத நிவாரண பெர்மிட்டுக்கள் அந்தந்த பிரதேச செயலகங்களினால் நேற்று முன்தினம் தொடககம் வழங்கப்பட்டு வருகின்றது.

(3-117)

### பயிற்சி வகுப்பு ஆரம்பம்

ஊர்காவற்றுறை,ஜூன்11

ஊர்காவற்றுறையில் அபிவிருத்தி தொண்டர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன

மின் தொழில்நுட்பம், கட்டுமாணத தொழில்நுட்பம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஊர்காவற்றுறை எமிலியானாஸ்பிள்ளை தொழில்நுட்பக் கல்லூரியிலும் - -

பனம் பொருள், உணவு உற்பத்தி, கடல்தொழில் நுட்பம், இயந்திரவியல் பயிற்சி நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் கரம்பன் சிவகுரு வித்தியாலயத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(3-18)

A/L 2002, 2003
உயிரியல்
ஆசிரியர்
தற்பரன்
ஆரம்பம் :
12.06.2001 3.30 p.m
BARATHY
(88919) சித்தன்கேணி

விஞைல்ஸ்
கல்வி நிலையம்
2003
கம்பனிக் க/குகள்
ஆரம்பம:-நாளை (12-06-2001)
செவ்வாய்
ஆசிரியர்:-
K.S. மோதிலால்
{(B.B.A.) F.M spl}
(மாலை 3.30 மணி)
(88908)

NEW SCIENCE COLLEGE JAFFNA
PAPER CLASS
2002 A/L
பௌதிகவியல்
அலகு ரீதியான மீட்டலும் கடந்தகால வினா விடையும
M.KARUNANITHY
TUE., THU. - 6.15 - 7.15
ஆரம்பம் :- 12.06.2001
(88915)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.